REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம்—பார்த்திப—மாசி கந, 24-2-'46—ஞாயிறு | இதழ் 30

JAFFNA COLLEGE LIBRARY, FEB 26 1946 VADDUKODDAI, CEYLON.

# பிக்குகளின் சங்கநாதம்

## அவதாரபுருஷனுக்கு எதிர்ப்பு

[கொழும்பு நிருபர் கடிதம்]

**ஸ்ரீ** சேனநாயகாவின் எதிர்கால அரசியல்வாழ்வு அவ்வளவு சொகுசானதாக இருக்கப்போவதில்லை. பௌத்த பிக்குகளே 'நவீன பராக்கிரமபாகு'வை எதிர்க்கத் தயார். நுணலுந் தன் வாயாற் கெடும் என்பது போல ஸ்ரீ சேனநாயகாவும் பௌத்த குருமாரின் உள்ளங்களைப் புண்படுத்தியதன் காரணமாக அந்தரப்படப் போகின்ருர்!

**ஸ்ரீ** சேனநாயகா போன்ற அரசியல்வாதிகள் பௌத்த பரிபாலனத்திற் தலையிடுவதாற் தான் சங்கம் சீர்கெட்டுச் சிதைவுறுகின்றதென்பது அநேக பௌத்த பிக்குகளின் அபிப்பிராயம். கடந்த வாரம் அகில இலங்கைப் பௌத்த குருமார் மகாநாடு இங்கு நிகழ்ந்தது. பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதைப்பற்றிச் சாதகமாகவோ, அன்றேற் பாதகமாகவோ தீர்மானிக்கச் சாதாரண மக்களுக்கு எவ்வித உரிமையுமில்லையென்பது இம் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறிய தீர்மானங்களில் ஒன்று.

இக் கூட்டத்துக்கு இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பிக்குகள் வந்திருந்தனர். ஏதோ தங்கள் சுயமரியாதைக்குப் பங்கம் நேர்ந்துவிட்டது என்றமுறையில் அவர்கள் உணர்ச்சியுடன் மகாநாட்டு நிகழ்ச்சிகளிற் பங்குபற்றினர்.. சமீபத்தில் ஸ்ரீ சேனநாயகா, மாத்தளையில்நடைபெற்ற ஒரு கூட்டத்திற் பேசும்போது, அரசியலுக்கும் பௌத்த குருமாருக்கும் எவ்வித தொடர்புமில்லையெனக் காரமாகப் பேசியிருந்தார். இது அவர்களுக்குச் சுருக்கென்றுதைத்துவிட்டது. இதனால் அநேக பேச்சாளர்கள் ஸ்ரீ சேனநாயகாவை நன்ருகக் கண்டித்துப் பேசியிருக்கின்றனர்.

லங்காதீபம் ஸ்ரீ சேனநாயகாவினதும் அவரது குடும்பத்தினரதும் பரம்பரைச் சொத்தல்ல. நாட்டு மக்கள் என்ற உரிமை குருமாருக்கும் உண்டென்பதை அவரால் உணர முடியவில்லை. 'பாவுீஸ' மனப்பான்மைதான் இதற்குக் காரணம். அநேக குருமார் கஷ்டப்படும் கமக்காரரின் பிள்ளைகள். அவர்கள் ஏழைகளை வருத்தும் பணக்காரக் கோஷ்டியின் வழித்தோன்றல்கள் அல்ல. தொழிலாளர்கள் குருமார்களுடன் இப்போது சேர்ந்துகொண்டிருப்பதைக் கண்டு முதலாளிகள் பீதியடைகின்றனர்.

பிக்குகள்மீது சுமத்திய குற்றத்துக்குப் பரிகாரமாக அவர் தமது வருத்தத்தைப் பகிரங்கப்படுத்தத் தவறும்பட்சத்தில் பிக்குகள் அத்தனைபேரும் மினுவாங்கொடையிற் குடியேறி அத்தொகுதிக்கு ஒரு தொழிலாளனின் மகனையே அரசாங்கசபைக்கு அனுப்பவும் தயார். முற்போக்குள்ள ஒருவரே எங்கள் தேவைகளை உணரக்கூடியவர். மகா பராக்கிரமபாகுவின் 'அவதாரம்' எனக்கருதும் ஸ்ரீ சேனநாயகாவுக்கு அது முடியாத காரியம் என்று பௌத்த சந்நியாசி ஒருவர் ஸ்ரீ சேனநாயகாவை எச்சரித்திருக்கின்ருர்.

நாட்டு விடுதலைக்காகவும் தங்கள் உரிமைகளுக்காகவும் மும்முரமாக முயற்சித்தல் அவசியமென்பதுமற்றுமோர் பிக்குவின் கருத்து.

பிக்கு ராகுலா மிகவும் கண்ணியம்வாய்ந்த ஒருவர். நல்ல அறிவாளி. இவருடைய பேச்சுக்கு இலங்கைப் பௌத்த உலகில் மதிப்பு உண்டு. சில பிக்குகள் ஸ்ரீ சேனநாயகா போன்ற பிரபுகளுக்குத் தூபதீபங் காட்டுவதை இவர் கண்டித்திருப்பது மன்றி பௌத்தர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் கிறீஸ்த ஸ்தாபனங்களின் தூண்களாக மிளிர்ந்துகொண்டிருப்பதையும் அம்பலப்படுத்தியிருக்கின்ருர்.

இம் மகாநாட்டிற் சில உண்மைகளும் வெளிவந்திருக்கின்றன. தமிழரும் இவற்றை அறியவேண்டும். 'தினமின,' 'சிலுமின' என்ற சிங்களப் பத்திரிகைகளை இலங்கையிலுள்ள சகல சிங்களரும் வாங்கிப் படிக்கின்றனர். டெய்லிநியூஸ் பத்திரிகையின் அதிபரே இவற்றையும் நடத்துகின்ருர். இச் சிங்களப் பத்திரிகைகள் பௌத்த குருமாருக்கு எதிராகப் பிரசாரஞ் செய்து வருவதைக் கூட்டத்திற் பலரும் அழகாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர். தவிர, இப் பத்திரிகைகள் கிறீஸ்த ஸ்தாபனங்களுக்குச் சார்பாக உழைப்பதாகவுந் தெரிவித்துள்ளனர். பௌத்தர்கள் என்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு புறச் சமயங்களுக்கு ஆதரவு அளிப்பதை அம் மகாநாடு சரியாகக் கண்டித்திருக்கின்றது.

### முடியாது!

இதை உண்மையென்றே நம்ப வேண்டும். ஏனெனில் சமீபத்தில் நிகழ்ந்த ஒரு கிறீஸ்த வகுப்பினரின் முக்கிய கூட்டத்தில், ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. அதன்படி கிறீஸ்த சமயத்தைத் தவிர்ந்த ஏனைய சமய போதனைகள் குறித்த நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிக்கூடங்களிற் போதிக்கப்படமாட்டா. அப்படியானும் புதிய கல்வித்திட்டத்தின்படி அப் பள்ளிக்கூடங்கள் அரசாங்கத்திடமிருந்து எவ்வித பண உதவியையும் எதிர்பார்க்க முடியாது அரசாங்கசபையின் தீர்மானத்தையே இவர்கள் எதிர்க்கின்றனர். இருந்தும் டெய்லிநியூஸ் என்ற ஆங்கிலத் தினசரி அத்தீர்மானத்தை ஆதரிப்பதுடன் அரசாங்கம் அப் பள்ளிக்கூடங்களின் சேவைகளுக்காகச் சகல உதவிகளையும் புரிய வேண்டுமென உபதேசிக்கின்றது. பணக்காரப் பத்திரிகை இப்படிப் போதிக்க முன்வந்திருப்பது நூதனமல்ல. இலவசக் கல்வியை, ஆரம்பத்திலிருந்தே ஆவேசத்துடன் எதிர்த்துவரும் இச் சிங்களப் பத்திரிகை நாடு விடுதலை பெறுவதையும் சகிக்கமாட்டாது!! அடிமை வாழ்வுக்கு அரண் செய்

## வகுப்புவாதிகள் ஒன்றுகூடல்?

யும் கோஷ்டிகளை ஆதரித்து அவர்களைக் காப்பாற்றினுற்தான் சார்ந்த உரிமைகளை அனுபவிப்பவர்களும் பணக்காரர்களும் உயிர் வாழமுடியும்.

இந்த உண்மைகளையெல்லாம் உணர்ந்துவரும் பிக்குகள் தங்கள் சமயத்துக்குத் துரோகம் விளைக்கும் சிங்களப் பத்திரிகைகள்மீது பாணந் தொடுப்பது தர்மத்தின் பாற்பட்டதே.

### சிங்கமும் பனையும்

**பௌத்த** பிக்குகளும் பத்திரிகைகளும் ஒருபுறமிருக்க, மிகவும் சுவாரஸ்யமான செய்தி ஒன்று இங்கு அடிபடுகின்றது. சிங்கள மகாசபையும் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸும் ஒன்று சேர்ந்து இலங்கை அரசியலிற் பங்குபற்றப் போகின்றனவாம்! அப்படியானுற் பெரிய பூகம்பங்கள் தோன்றக் கூடுமென எவரும் நடுநடுங்க வேண்டியதில்லை. இச் செய்தி ஸ்ரீ சேனநாயகாவுக்குத் திகிலை உண்டுபண்ணத்தான் செய்யும். ஸ்ரீமான்கள் பண்டாரநாயகாவும் பொன்னம்பலமும் ஒன்று சேர்ந்தால் ஸ்ரீ சேனநாயகாபாடு பெரிய திண்டாட்டமாகத்தானிருக்கும். சிங்கமும் பனையும் நட்புரிமை கொள்வதால் எவ்வித தீங்கும் விளையமாட்டாது. சிங்கம் பசித்தாலும் பனையைத் தின்னமாட்டாது! பனையும் சிங்கத்தை ஒன்றுஞ் செய்ய முடியாது. இந்நிலையில் இருவரும் ஒன்றுசேர்ந்து விட்டால் சேனநாயகா கோஷ்டி நிம்மதியாக இருப்பது முடியாதாகின்றது. அப்படி இல்லையென்று 'பண்டா'வும் 'பொன்னு'வும் ஒருபந்தியிலிருந்து போசன மருந்தினுலும் பின்னர் யார் பிரதம மந்திரியாவது என்ற பிரச்னை அநேக சிக்கல்களைக் கொண்டு வந்துவிடும். இந்த அழகில் ஸ்ரீ சேனநாயகா ஒரு மாதிரிச் சுழியோடித் தப்பிக்கொள்ளுவார் அல்லவா!

### மந்திரிக்குத் தலையிடி

**இலவசக்கல்வி** வந்தாலும் வந்தது. அதனுேடுகூடக் கல்விமந்திரிக்குத் தலைவலியும் ஏற்பட்டிருக்கின்றது. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல நாட்டின் நன்மையைக் கருதி இலவசக்கல்வித்திட்டத்தை ஏற்படுத்தியபோதிலும் இப்புதிய திட்டத்திற் சேர்ந்துகொண்ட சில பள்ளிக்கூடங்கள் மறைமுகமாவும் வேறு தந்திரங்களையுங் கையாண்டும் பிள்ளைகளிடம் பணம் வசூலிப்பதாகத் தெரிகின்றது. இத்தகைய பள்ளிக்கூடங்களின் அடாது வேலை மந்திரிக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கல்வி நிர்வாக சபை இந்த ஊழல்களை விசாரணைசெய்து, தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமென அறிகின்றேன்.

### ஞானம் பிறந்தது

**இலங்கையிலுள்ள** தமிழர்களிற் சிலர் தாங்கள் இலங்கை மக்கள் என்பதை யறியாது இந்தியத் தமிழருடன் சேர்ந்து தங்கள் உரிமைகளுக்கு வாதாடினர். சிங்களர், தமிழர் என்ற பேதத்தை மறந்து அனைவரும் இலங்கைமக்கள் என்ற முறையில் உழைக்க வேண்டுமென்பதை இவர்கள் அப்போது உணரவில்லை. அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் தான் இப்படி நின்று போராடியது. இதில் முழுமூச்சாகக் காரியதரிசி வேலைபார்த்துவரும் யாழ்ப்பாணத்துப் 'புரக்டர்' ஒருவருக்கு இப்போது ஞானம் பிறந்திருப்பதாகத் தெரிகின்றது. இலங்கைத் தமிழர் புறத்தே நிற்காமற் சிங்களருடன் சேர்ந்து இலங்கை மக்கள் என்ற முறையில் நாட்டின் விடுதலைக்காக உழைக்கவேண்டுமென்பதை இவர் இப்போது நன்ருக உணர்ந்திருக்கின்ருர். பலருடன் பேசியுமிருக்கின்ருர். இருந்தபோதிலும் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸின் சில கோரிக்கைகள் நீதியானவையென்பதையும் வற்புறுத்துகின்ருர். சமபல பிரதிநிதித்துவம் தலையடி பெற்றதின் விளைவாகச் சிலருக்கு இச் சித்தாந்தம் உதித்திருக்கின்றது. சந்தர்ப்பவாதிகள் இந்த மாதிரி நடந்துகொள்ள வேண்டியது அரசியற் சம்பிரதாயங்களில் ஒன்று என்பதை அறியாதார் யார்?

---

# சீல வாழ்க்கையின் மாண்பு

## இந்துக் கல்லூரி அதிபர் வாசகம்

'ஈழகேசரி' விசேஷ நிருபர்

யாழ்ப்பாணம், 23-2-46

"வகுப்புவாதப் பூசல்களும் சமய உணர்ச்சிகளும் எமது சமூகத்தை அதிகமாகப் பாதித்து வாழ்க்கையுடன் பின்னிக்கொள்ளும் எங்கள் நாட்டிற் பள்ளிக்கூடங்கள் வழிகாட்டிகளாக அமைவது அத்தியாவசியம்" என யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் ஸ்ரீ ஏ. குமாரசுவாமி எம். ஏ. தமது வருடாந்த அறிக்கையிற் குறிப்பிட்டார்.

**இந்துக் கல்லூரியின்** வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்றுமாலை கல்லூரியில் நிகழ்ந்தது. இந்தியக் கல்வி நிபுணர் ஸ்ரீ சஞ்சீவி ராவ் முக்கிய பேச்சாளராக விருந்தார். கல்லூரி அதிபர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

பலவித மக்கள் நிறைந்த சமூகத்துக்குச் சேவை செய்யும் பள்ளிக்கூடங்கள் சகல மக்களையுந் தன்னகத்தே கொண்ட சிற்றுருவங்களாக மிளிர வேண்டும். எங்கள் கல்லூரியில் இந்துக்களும், முஸ்லீம்களும், பௌத்தர்களும் கல்வி பயிலுகின்றனர். ஒரே வீட்டில், ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப்போல் வாழ்ந்தும் வருகின்றனர்.

எம்மதமும்சம்மதமெனக்கருதி வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்துக்களாகிய எமக்கு எச்சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் அவர் தம் சமயத்தைப் போதிப்பதில் எவ்வித ஆட்சேபமும் இல்லை எனத் அழுத்தமாகக் கூறிவிட்டு அதிபர் புதிய கல்வித்திட்டத்தைப் பற்றியும் சில வார்த்தைகள் கூறியிருக்கின்ருர். இலவசக்கல்வி அறியாமையை விரைவிற் போக்குவதுடன் சகல மக்களுக்கும் வாழ்க்கையிற் சமமான சந்தர்ப்பங்களை அளிக்கின்றது. இவ்விரண்டினைப்பற்றியும் எவரும் மாறுபாடான அபிப்பிராயத்தைக் கொள்ள முடியவே முடியாது. வாதப்பிரதி வாதங்களையும் நிகழ்த்தவும் இயலாது. இலவசக்கல்வி சாலச் சிறந்ததென்பது ஒப்ப முடிந்தவோர் உண்மை.

ஆனல் அபிப்பிராய பேதமும் சண்டப்பிரசண்டங்களும் எழுவதற்கு எவைகாரணம் என்பதையும் கவனிப்போம்.

முதலாவது: எந்தமொழி மூலம் பிள்ளைகளுக்குக் கல்வியை யூட்ட வேண்டுமென்பது.

இரண்டாவது: அரசாங்கம் உதவும் உபகரண நன்கொடை மிகக் குறைவாக விருப்பதால் கல்வியின் தரம் மிகக் குறைந்துவிடுமென்பது.

மூன்ருவது: பள்ளிக்கூடத்திற் பயிலும் மாணவர்களுக்கு அவர் தம் சொந்தச் சமயத்தைப் போதிக்கவேண்டிய தலையாய கடமை.

**கல்வி** பயிலும் வயது நிறைந்த சகல மாணவரும் அவர்களுடைய சுய இயல்புக்கும் வல்லமைக்குந் தகுந்த கல்வியைப் பெறும் காலம் எப்போது கிடைக்கின்றதோ அத்தினம் இலங்கையின் கல்விச் சரித்திரத்தில் மகத்தான ஒரு நாளாகக் மதிக்கப்படும். புதிய கல்வி அறிக்கையிற் கண்டபடி பலவிதமான பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படும். இப்பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் சொந்த நாட்டுக்கும் சுய இயல்புக்கு ஏற்ற கல்வியினைப் பயிலும் பாக்கியத்தைப் பெறுவார்கள். சதா விலைமாறிக் கொண்டிருக்கும் ஒரு உலகில் இன்று நாங்கள் வாழ்கின்ருேம். நிலையான மதிப்பைக் கணிப்பதற்காக இன்றைய உலகம் இருளிற் தடவித் தத்தளித்துக்கொண்டு செல்கின்றது. எங்கள் நாட்டில் ஒருவரைக் கணிப்பதற்கு அவருடைய சீரான வாழ்க்கையும் குணசீலமும் உரைகல்லன்று. ஒருவர் வகிக்கும் அந்தஸ்தைக் கொண்டே அவரை நாம் கணிக்கின்ருேம்; மதிக்கின்ருேம்.

**எங்கள்** நாட்டில் எழுங் கருத்துக்கள் யாவும் உண்மையை அஸ்திபாரமாகக் கொண்டவையல்ல. அன்றேல் ஆராய்வோடும் நிதானத்தோடும் எதையும் எவரும் பேசுவதுமில்லை. இந்த அழகில் இலங்கையின் எதிர்கால வாழ்வைப் பக்குவம் பண்ணும் ஆசிரியர்கள் இக்குறைபாடுகளைத் தீர்த்து வைப்பதில் மிக முக்கிய பங்கு எடுக்கவேண்டியவர்களாகின்றனர். இது அவர்களது கடன். நாட்டின் எதிர்காலம் இவர்களிற் தான் தங்கியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற்பயிலும் மாணவர்கள் சீலமான வாழ்க்கையின் மகத்துவத்தை நன்கு உணர்வார்கள். ஒருவனுடைய அந்தஸ்தைக் கண்டு அவர்கள் மயங்கிவிடுவதில்லை. குணமென்னுங் குன்றேறி நிற்பவர்களையே அவர்கள் தகுந்த மனிதர்களெனச் சரியாகக் கணித்து வருகின்றனர். அரசியற் துறையிலோ, அன்றேல் வேறு விஷயங்களிலோ எவ்வித பிரதிகூலத்தையுங் கருதாது செய்யும்பணியே சேவையின் சிகரம் என்பதையும் அவர்கள் நன்கு அறிவார்கள்.

**பரிசளிப்பு** விழா அழகாக நிகழ்ந்தது. ஸ்ரீமதி R. R. நல்லையா பரிசுகளை வளங்கினுர். நியாயவாதி ஸ்ரீ முத்துசுவாமிப்பிள்ளை அனைவருக்கும் நன்றி கூறினுர்.

ஸ்ரீ சஞ்சீவி ராவ் அவர்களின் பேருரை ஆழ்ந்த கருத்துக்களுடன் மிளிர்ந்தது. தங்கு தடையின்றி அவர் ஆங்கிலத்தைத் 'தண்ணீர் போல'ப் பேசுகின்ருர்.

---

## பம்பாய் மாலுமிகள் ஆர்ப்பாட்டம்

கடந்தவாரம், பம்பாய் துறைமுகத்து இந்திய கடற்படையைச் சேர்ந்த சுமார் 300 மாலுமிகள் பெரிய ஆர்ப்பாட்டம் செய்தனர். இதன் விளைவாகப் பம்பாய் நகரின் முக்கிய கடைத்தெரு ஒன்றில் குழப்பம் ஏற்பட்டது.

கொடுக்கப்படும் உணவு மகா மோசமாயிருப்பதென மாலுமிகள் புகார்செய்து, வேலைநிறுத்தம் ஆரம்பித்தனர். 2,000 கடற்படைத் தொழிலாளர் இவர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

இராணுவ சட்டத்தை மீறிக் கலகஞ் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பெற்று ஏராளமான பேர் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டங்களை அமைதியாகவும் அஹிம்சைக்கு உட்பட்டும் நடந்துகொள்ளும்படி நகர வீதிகளில் கூறிக்கொண்டுவந்த இந்திய கடற்படையைச் சேர்ந்த 'லொரி' காரிற் தேசியக்கொடி பறந்துகொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

கொண்டோடி ●

● 'அதிக உணவு பயிரிடுக' என்ற சுவரொட்டிகள் பல யுத்த காலத்திற் காட்சியளித்தன.

✲ இவை ஏராளமான கண்களுக்கே விருந்தாயிருந்தனவாம்.

✲ இவற்றிலுள்ள எழுத்துக்கள வர வர இப்பொழுது மங்கிக்கொண்டிருக்கின்றனவாம்.

✲ உணவு நிலைமையோ இதனுடன் போட்டிபோட்டு மங்கிக்கொண்டு போகின்றதாம்.

✲ சுவரொட்டிகளைப் பார்த்துப் பூத்த கண்கள் இனிமேல் வயிறொட்டிகளை நோக்கிப் பரிதவிக்க வேண்டிவருமாம்.

● பரிதவித்துக் கொண்டிருக்கும் இந்நிலைமையில் சீமையிலே 'அதிக குழந்தைகள் பெறுக' என்ற பிரசாரம் நடைபெறுகின்றதாம்.

✲ வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் வாரம் தொடக்கமாகப் பிரித்தானியாவிலுள்ள பெண்கள்யாவரும் ஒவ்வொருசெவ்வாய்க்கிழமையிலும் 'தாய்மார் தினம்' என்ற மங்கள வாரம் கொண்டாடுவார்களாம்.

✲ மூத்ததல்லாத மற்றைய ஆண் குழந்தைகளொவ்வொன்றுக்கும் ரூபா 3 50 வீதம் எல்லாத் தாய்மாருக்கும் படியளக்கப்படுமாம்.

✲ இதனால் எத்தனையோ சுசீலைகள் பரமாத்துமாவின் பலனைப் பெறப் போட்டியிடுகின்றூர்களாம்.

● போட்டி போட்டுக்கொள்வதில் மக்கள்தான் முன்னணியில் நிற்பவர்களாம்.

✲ பத்திரிகைகளும் போட்டி போடுகின்றன வே.

✲ இதிலும் பல தினுசாக நடைபெறுகின்றதாம்.

✲ ஒன்றைப்பார்த்து இன்னென்று 'கொப்பி' யடிப்பதிலும் போட்டியாம்.

✲ நையாண்டி பண்ணி முன்னுக்கு வர எத்தனிப்பதும் இன்னெரு தினுசாம்.

✲ போட்டி போட்டு ஏமாந்வர்கள் பலராம்.

✲ இவர்கள்தான் வான்கோழிப் பிறவிகளாம்.

● யுத்தப் போட்டிதான் மிகவும் கொடூரமானதாம்.

✲ இதில் இப்பொழுது பரிசெத்தவர்கள் நேசவல்லரசினராம்

✲ இவர்களிடையேயும் போட்டி மூண்டுவிட்டதாம்.

✲ யுத்தத்தைத் தலையெடுக்க விடாமற் செய்தது ஒரு பரம இரகசியமாம்.

✲ இந்த இரசியத்தை ஒருவருக்கும் சொல்லாமல் வைத்திருப்பவர்கள் அமெரிக்கர்களாம்.

● இதற்குப் பெயர்தான் பரமாணுக்குண்டு.

✲ பிரித்தானியா இதன் இரகசியத்தைக் கண்டுபிடித்திருப்பதாக ஜம்பமடிக்கிறதாம்.

✲ உண்மையில் அமெரிக்கர்தான் இதனை இரகசியமாய் வைத்திருக்கிறூர்களாம்.

✲ ருஷியர் இதனை அறிந்துவிடுவதற்கு அமெரிக்காவில் துருவி நுழைகின்றூர்களாம்.

✲ இவர்கள் ஓரளவுக்கு வெற்றிபெற்றிருப்பதாகச்செய்தியொன்று காதில் வந்து நுழைகிறது.

---

### 29-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

18-ம், 25-ம், இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளைகள் அதிற் குறிக்கப்பட்டுள்ளபடி 12-வது. 13-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளைகளுடனல்ல, 12-வது. 14-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளைகளுடன் தொடர்புடையது என வியாபாரிகட்கும் பொதுசனங்கட்கும் இதனுல் அறியத்தருகிறேும்.

ஈ. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 13.2.1946

[2645]

### 208-வது புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல்
#### பிரத்தியேக கூப்பன்கள்

1946-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஈருக வழங்கப்பட்ட பிரத்தியேக கூப்பன்களை இத் திகதிக்குப்பின்னர் வியாபாரிகள்ஏற்றுக்கொள்ளப்படாது

ஈ. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 19-2-1946

[2646]

### சிவராத்திரி விழா

புத்தூர் நவக்கிரியிலுள்ள நிலாவரைக் கருகில் நவசைலேசுவர பரிபாலன சபையார் ஆதரவில் இம் மாதம் ககூ.ந உ (2-3-45) சனிக்கிழமை இரவு சிவராத்திரிவிழாக் கொண்டாடப்படும். பல அறிஞர்கள் பிரசங்கம் செய்வார்கள். நாடகங்களும் நடைபெறும்.

---

## 'confidential'
## BOOK NEWS

| | |
|---|---|
| A Text Book of Intermediate Physics by Moore | Rs. 16/80 |
| Modern World by Pakeman ... ... | Rs. 4/45 |
| The Struggle of Modern Man (An outline of modern History from 1450 to the present day) ... | Rs. 1/50 |
| Wild Ceylon by R. L. Spittel ... ... | Rs. 7/50 |
| A Miniature History of the War (down to the liberation of Paris) by C. K. Ensor ... | Rs. 3/— |
| Just Flesh by D. F. Karaka ... ... | Rs. 5/50 |
| This the India by D. F. Karaka ... | Rs. 6/90 |
| With 14-th Army by D. F. Karaka ... | Rs. 4/75 |
| Professional Conduct and Advocacy by Krishnaswami Aiyar ... | Rs. 7/50 |
| Letters of Rt. Hon. V. S. Srinivasa Sastri ... | Rs. 6/— |
| Folk-Dances of South India ... ... | Rs. 4/50 |
| World of Dreams ... ... | Rs. 6/50 |
| I. N. A. Defence by Bhulabhai J. Desai... | Rs. 1/50 |
| Sri Aurobindo Mandur Annual ... ... | Rs. 6/— |
| Numismatic Parallels of Kalidasa ... | Rs. 2/— |
| Keeping Fit (A health book for Senior Girls) | Rs. 2/25 |
| Elements of Needlework ... ... | Rs. 4/— |

**War Pictures by British Artists**

| | | | |
|---|---|---|---|
| War at Sea ... | Rs. 1/10 | Soldiers ... | Rs. 1/35 |
| Blitz ... | Rs. 1/10 | Air Raids ... | Rs. 1/35 |
| Women ... | Rs. 1/35 | Productions ... | Rs. 1/35 |

**S. S. Sanmuganathan & Sons**

PUBLISHERS & BOOK SELLERS
VANNARPONNAI, :: :: JAFFNA

---

புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

## கொழும்பு
## கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறூர்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

## கொழும்பு
## கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

**COLOMBO COMMERCIAL CO., LTD**

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2620]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் அறம்

த. கயிலாயநாதன்

> 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' கடந்தவாரம் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடிற்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் பயிலும் அன்பர் ஒருவர் இக் கட்டுரையை எழுதியுள்ளார். —ப-ர்.

தமிழ் நாட்டிற்கு மாத்திரம் பறக்க வேண்டிய கொடி இன்று பிறநாட்டிலும் பறக்கிறது. இது தமிழ்ப் புலவன் நாட்டிய கொடி. தமிழ்ப் புலவன் மாத்திரம் அன்று, உலகப் புலவன் என்றே கூறிவிடலாம். பதினெண் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பெருமையைப் பெற்றுளது இவன் நூல். "திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டுமல்லவா?" உலகம் ஒப்ப முடிந்த உண்மையை உரைத்தனன். எம்மதத்தினரும் எக்காலத்திலும் ஏற்கும் நூலைத் தோற்றுவித்தனன். தமிழ்நாடு இப்புலவனை உலகினுக்கே ஈந்தது. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியார் வியந்த தெய்வப் புலவனே இவன். இன்று இப்புலவன் திருநாள். தமிழ் நாடு ஈன்ற பொழுதிலும் இன்று பெரிதுவந்தது.

இத்தகைய புலவனைத் தமிழ் மக்கள் எத்துணைப் போற்ற வேண்டும். "தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை" என்று பெரியார் வழி நின்றொழுகுதலைச் சிறந்ததென அறைந்த புலவன்வழி நின்றொழுகுவோம். வள்ளுவரை உள்ளத்தில் கொள்வோம். நல்லார் சொற் கேட்போம்.

திருவள்ளுவர் சொல் வன்மை மல்கிய மாபெரும் புலவன். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தனன். நுண்மாண் நுழை புலம் மிக்கவன். இவன் புலமை எவரிடத்திலும் காண்பதரிது. "சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால்" என அரிசில்கிழார் போற்றினர். அன்னான் ஈந்த நூல் தமிழ்மறையென மிளிர்கின்றது. இன்றும் புலராது நிற்கின்றது. என்றும் தழை மலிந்து மலர் அலர்ந்து நிலவுகின்றது. தேன் பிலிற்றுகின்றது. "ஆரியம் வேதமுடைத்து தமிழ் திருவள்ளுவனாரோது குறட் பாவுடைத்து" என வண்ணக்கஞ்சாத்தனாரால் புகழ்ந்து கூறப்பட்ட தமிழ் வேதம் திருக்குறளாகும். தமிழ் மறையோனால் அறத்திற்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்ட உயரிய கருத்தைச் சிறிது ஆய்வாம்.

**வாழ்க்கையின் நோக்கம்** பேரின்பம் அடைவதே. இறைவனை உணர்ந்தவரே அவ்வழி நின்றவராவர். "ஒன்றுணர்ந்து நிற்பாரே நீணெறிச் சென்றார்" என்றார் குமரகுருபர சுவாமிகள். இது "சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய அந்தமிலின்பத் தழிவில்" வீடாகும். இதைத் துறவறமாகிய காரண வகையால் நாயனார் கூறிப்போயினர். துறவறத்திற்கு அருளே சிறந்ததென இதன்கண் "அருளுடைமை" முதலிற் கூறப்பட்டது. "அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை" என அருளையே துறவறம் நோக்கும் வீடு, இன்றியமையாமையாகக் கொண்டது. அன்பின்றி அருளில்லை. "அருளென்னும் அன்பு ஈன் குழவி" என பெருநாவலர் வருவித்தனர். ஆகவே துறவறம் அன்பை நோக்கியிருக்கின்றது.

அன்பு விளையும் களம் இல்லறமேயாம். "இல்லறமல்லது நல்லறமன்று" என நல்லிசைப் புலமை மெல்லியலாள் சொல்லினள். இல்லறமென்பது இல்வாழ்க்கையிலேயே வளர்கின்றது. இல்வாழ்க்கை கற்பென்னுந் திண்மையுள்ள வளாகிய வாழ்க்கைத் துணையுடன் நடத்துவதே. "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்று கண்டவள் ஒரு பெண்மணியே.

ஆகையால் அன்பு வித்தாய்த் தோன்றுவது இருவர்மாட்டே. இது "உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு" எனப்படுகிறது. அன்பினால் இருவர்கருத்தும் ஒன்றுபட்டே "உணர்ச்சி நட்பாங் கிழமை" தருகின்றது. "காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே" இவர்கள் இன்பம். இவர்களிடத்துத் தோன்றிய அன்பே நல்லறமாகிய இல்லறத்தைப் பயக்கின்றது.

இல்வாழ்க்கையில் நிகழும் அறனுக்கு அன்பே காலாகும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனுமது" என்பது பெருநாவலர் திருவாக்காகும். "மங்கலம் என்ப மனைமாட்சி" உடைய வாழ்க்கைத் துணையிடத்தே தோன்றி வளரும் அன்பு "நன்கல நன் மக்கட் பேற்றின்" போது முதிர்கின்றது. மக்கள் செவிக்கும் மெய்க்கும் இன்பம் பயப்பர். அன்பினில் விளைந்த ஆரமுதை அளிப்பர். "சிறு கை அளாவிய கூழ்" அமிழ்தினும் இனிதாம். அவர் மழலைச் சொல் குழலினும் யாழினும் இனிதாம. மக்கள் தாம் தரும் இன்பத்தினால் அளப்பிலா அன்பை வளர்க்கின்றனர். இவருக்குப் பால் நினைந்தூட்டும் தாயின் அன்பு சொலத்தகுமோ. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்ற பழமொழி ஒருவன் தன மகவிடம் காட்டும் அளவு கடந்த அன்பைத் தெற்றென விளக்குகின்றதன்றோ!

இவ்வாறு இருவரிடம் தோன்றி வளர்ந்த அன்பு புதல்வரால் முதிர்ந்து பிற உயிர்கள் மேற் சென்று பழுக்கின்றது. அன்பே அருளாய்க் கனியும். இல்லறம் துறவறமாகும். துறவறமென்பது "எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலே." இத்துறவறமே வீடு பயக்கும். ஆகவே அன்பின் வழி நிற்கும் இல்லறம் வீட்டைக் காட்டும். இல்லறம் அறத்திற் சிறந்ததென்பது பெறப்பட்டது. அவ்வறம் "இயல்புடைய மூவர்க்கு நல்லாற்றினின்ற" துணையாம். துணையெனப்பட்டது ஈதலையே குறித்தது. "ஈதல் அறம்" என முடிபு கட்டினர் மூதாட்டியாரும்.

ஈதலைச் செய்யாதவன் ஒரு அறத்தையும் பேணாதவன். ஈதலைச் செய்ய இயலாதவன் சாதலே இனிது என்று பொய்யில் புலவர் ஈகையை உயர்வாய்க் கூறுகிறார். "சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம் ஈதல் இயையாக்கடை" என்கின்றார். ஐயோ! எதைச் செய்தாலும் யாராவது இறக்க விரும்புவோமா? மனத்திலும் எண்ணுவோமா? அறத்திற்காக ஈய விரும்பாவிட்டாலும், திருவள்ளுவர் இறக்க வேண்டுமென்று கருதிய மக்கள் தொகுதியில் யாம் சேராமல் இருப்பதற்கு ஒரு வழி தேடுவோம். ஈதலினும் சிறந்த அறம் ஒன்று உண்டாயின் நாங்கள் நல்வினை உடையோம். அப்படி ஒன்று உண்டா என்பதைத் தெய்வப் புலவரிடம் இவர் திருநாளாகிய இன்று ஆய்ந்து அறிவோம்.

ஈதலை எல்லா அறத்திலும் உயர்வாய் வள்ளுவர் கூறுவது இயல்பே. "வள்ளுவர்" என்பதே "வண்மை" என்னும் பண்படியாகப் பிறந்தபெயர். "வண்மை எனில் ஈகை என்பதே பொருள். ஈகையே பெயராய் உடையவர் ஈய இல்லாதவர் இறத்தல் தகுமெனக் கூறுவார்தானே! இது குமணன் போன்றவர்கட்கன்று எம்போன்றவர்க்கு இயலாததொன்றே. ஈய இயலாதவர் "அறஞ்செயவிரும்பு" "ஈவது விலக்கேல்" என்று விரும்புவதிலும், கொடுப்பவரைத் தடுக்காமல் இருப்பதிலும் அறத்தைச் செய்யலாமென ஔவையார் புகன்றனர். அங்ஙனமாயின் இறந்துபோ என விரும்பும் வள்ளுவரை நாம் விரும்புவானேன்? இந்நிலையிலாவது தெய்வப் புலவர் இரங்காரா? இதனினும் எளிதொன்று கூறாரா? ஆம், ஈதலைவிட உயர்ந்த அறத்தைக் கூறுகின்றனர். "அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து இன்சொலனாகப் பெறின்" என ஈதலினும் இன்சொல்லை உயர்வாகக் கூறினர். இன்சொல் உடையாரே அறச் சிந்தை உடையவராவர். ஈதற்குப் பொருள் இல்லாவிட்டாலும் முகன் அமர்ந்து இன்சொல்லை எளிதாக ஈயலாம். இதற்கும் வறுமையா? இன்சொல் ஈயாதோர் கொடியவரே. "ஈகை அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல் ஓகோ கொடிது கொடிதம்மா" என்றனர் குமரகுருபர சுவாமிகள். இவர்கள் இறத்தலே இனிது.

**உண்மை அறமானது** முகத்தால் விரும்பி, இனிதாகப் பார்த்து, மனத்துடனாகிய இன்சொற்களைச் சொல்லுதலே. "முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம் இன்சொலினதே அறம்" என்றதனால் அறம் இன்சொல்லினிடத்தே என்பது வெளிப்படை. அல்லாமலும் நன்மையைத் தரும் சொற்களை ஆராய்ந்து இனிமையுள்ளவனாக ஒருவன் சொல்லுவானாகில் பாவங்கள் தேய்ந்து அறம் வளரும். "அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்" என்ற உயரிய கருத்து உணர்த்தப்பட்டது. ஆகவே அறத்திற்கு அடிப்படையாய் முகன் அமர்ந்த இன்சொல்லை உலகப் புலவன் நிறுவினானன்றோ!

இன்சொல் அறம் மாத்திரமன்று. உலக வாழ்க்கையைத் திறம்பட நடாத்துவதற்கு இன்றியமையாதது. சமூகம் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையுள்ளது. ஒருவரை ஒருவர் சொல்மூலமாகவே அறிகிறோம். இனியவை எண்ணினாலன்றோ இன் முகமும் இன் சொல்லும் காணலாம். ஒருவர் இனிதாக நடந்தாலே பயனைப் பெறலாம். இன்சொல்லே இனியவை பயக்கும். உலகத்தோரை மகிழ்விக்கும். "இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே" என்பது மூதுரையாகும். ஆகையினாலே இன் சொல் கூறும் வகையால், இனியவை நினைத்து, இனியவை ஆற்றி, அறம் போற்றி, பேரின்பப் பெருவாழ்வு எய்துவோமாக. திருவள்ளுவர் திருவடி எவர் உள்ளத்திலும் உறைக. தமிழ் வாழ்க.


## 206-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**வியாபாரிகளுக்கு**

வியாபாரிகளுக்கும் விலை அடையாளம் இடும் கிளையினருக்கும் இடையில் ஷேட்டுகளின் (Shirts) விலை சம்பந்தமாக அடிக்கடி மாறுபாடுகள் ஏற்படுகின்றன. இறக்குமதியாளர் தாங்கள் பண்டங்களை இறக்குமதி செய்யுமுன் விலை நிர்ணயிக்கப்படாத புடவைகளின் மாதிரித் துண்டுகளை (Samples) எம்மிடம் காட்டி அவைகளின் சில்லறை விலை எவ்வளவாயிருக்கும் என்ற எனது உத்தரவைப் பெற்ற பின்தான் இறக்குமதி செய்யலாம்.

ஈ. றொட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 15-2-1946.
[2647]


## கல்வி நிலை?

மா. பீதாம்பரன்

கல்வியில வசமெனவே கற்றோரும் மற்றோருங்
களிக்கு(ம்) நாளில்
நல்லினிய தமிழ்விடுத்து நானிலமே நாடுமொழி
நாடி நாடிச்
செல்பவரே தெருவெல்லா மாமாயிற் செந்தமிழ்க்கு
நல்ல காலம்
இல்லையோ! இனிவருமோ! இயல்பறியேம் இத்தகைமை
என்னே! என்னே!!

தாய்மொழியே கலைப்பயிற்சிக் குரியதொரு தாயகமாம்
என்றே கற்றோர்
வாய்மொழிவ தல்லாமல் வழக்காற்றிற் செம்மொழிதான்
வயங்கக் காணோம்;
தாய்மொழியே தமிழான ஆசிரியர் தங்கணிலை
எதுவோ வென்ன
ஆய்வதிலே அகங்குழைய ஆங்கிலமே தலைசிறந்து
தழைத்த தாலோ!

ஆரம்பக் கல்வியுடன் அழிந்திடுமோ அரியதமிழ்,
அல்லால் எங்கும்
ஆரம்ப மாகிடுமோ அங்கிலந்தான்; அதனடிக்கீழ்
அமிழ்ந்தி நாளும்
சீரின்றிச் சிதைந்திடுமோ? சிங்களமுஞ் செந்தமிழுஞ்
சேர்ந்தொன் றாகிப்
பாரிலொரு 'சிலோனியமே' பரவைவழக் காகிடுமோ
பார்மின்! பார்மின்!!

# இந்திய மறுமலர்ச்சி

★

சுவாமி நடராஜானந்தர்

இந்துதர்மத்துக்கும் இந்திய சமுதாயத்துக்கும் சுவாமி விவேகாநந்தர் ஆற்றிய அருந் தொண்டினை அறிவதற்கு அக்காலத்தில் இந்தியநாடு எய்தியிருந்த நிலைமையைச் சிறிது ஆராயவேண்டியிருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சி நிறுவப்பட்டது. இரண்டு நூற்றாண்டுகளுக்குள் கிழக்கிந்தியா வர்த்தகக் கொம்பனியார் இந்திய அரசாங்கத்தைக் கைப்பற்றினர். பெரிய மோகலாய ஆட்சி சீர்குலைந்து, அதற்குப் பதிலாக ஆங்கில ஆட்சி நிறுவப்பட்டிருப்பதைக்கண்டு இந்துக்களும், முஸ்லீம்களும் வெட்கித் தலைகுனிந்தனர். அழியாப் பொருள்களாகிய வேத உபநிடதங்களை உலகுக்களித்து, தனது வர்த்தகம் வியாபாரம் முதலியவற்றால் பண்டைக்காலத்து ரோம், கிரீஸ், எகிப்து என்னும் நாடுகளுக்குச் செல்வத்தை வளங்கிய இந்திய நாட்டின் நிலைமிகவும் பரிதாபகரமாயிருந்தது. மேனாட்டுக் கலைகள் தோன்றித் தேசீய கலைகளை மழுங்கச்செய்தன. மேனாட்டாரின் நவநாகரீகம் இந்தியரின் மனதைக் கவர்ச்சிசெய்தது. அதன் பயனாக நம்நாட்டிலுள்ள கலைப் பொக்கிஷத்தின் மீதுள்ள அபிமானம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று. பல்லாண்டுகளாக இருடிகளும், தத்துவ சாஸ்திரிகள், அரசியல் நிபுணர், தேசாபிமானிகள் முதலியோர்களின் முயற்சியால் கட்டப்பட்ட இந்திய நாகரீகம் தன் நன்மதிப்பை யிழந்தது.

தேசீய கலைகள் மட்டுமன்றி ஆத்ம ஞானமும் குன்றுவது போல் தோன்றிற்று. மக்காலே பிரபு என்பவர் ஒரு புதிய கல்வித்திட்டத்தை வகுத்து இந்தியாமீது சுமத்தினர். இந்துக்களின் சமயாபிமானத்தை உடைத்தெறிவதே அத்திட்டத்தின் நோக்கமாகும். அந்தக் கல்வியானது வளரவே, மாணவர் மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளலாயினர். மேல்நாட்டுத் தத்துவசாஸ்திரம் பரவி மக்களின் மனபாவத்தை மாற்றிவிட்டது. போதாக் குறைக்குக் கிறிஸ்தவப் பாதிரிமார் இந்துதர்மத்தை ஏளனஞ் செய்தனர். அவற்றின் கொள்கைகள் பொய்யானவை என்று வாதிக்கத்தொடங்கிவிட்டார்கள். அந்தக்காலத்துப் பிரபல நீதிபதி உவில்லியம் எட்வேட் என்பார் "இந்நாட்டைக் கிறிஸ்துமய மாக்குவதே நம்முடைய சிறந்த பாதுகாப்பு" என்று கூறியுள்ளார்.

இந்து தர்மம் தனது பிரபையை இழந்தது. வேதம், உபநிடதம், கீதை என்பனகூறும் உயர்ந்த போதனைகளுக்குப் பதிலாக மூடக் கொள்கைகள் பரவத் தொடங்கின. அடிமை வழ்வில் ஈடுபட்டிருந்த காரணத்தினாலே, தன்னம்பிக்கை, அஞ்சாமை, சுயேச்சை என்னும் குணங்களை இந்தியர் இழந்தனர். சாதிபேதம் தலையெடுத்துத் தீண்டாமையென்னும் மூளையை விதைத்தது. அதன் விளைவின் பயனாக இந்திய சனசமூகம் பிளவுபட்டு ஒற்றுமையை இழந்தது. உயர்ந்த சாதியார், தாழ்ந்த சாதியாரை இம்சித்து நடாத்திவந்தனர். சுருங்கச் சொல்லின இந்திய நாடானது வாழ்வின் உயர்ந்த இலட்சியத்தை மறந்துபோயிற்றெனலாம்.

இந்து தர்மத்துக்குப் புத்துயிரளிக்கவும் பாரதத்தாயின் பெரும் புகழும் உலகெங்கும் பரவவும் இந்திய வானில் இரு பெருஞ் சுடர்கள் தோன்றின. அவர்கள்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் விவேகாநந்தரும் ஆவர். சுவாமி விவேகாநந்தரைப் பற்றி நாம் அறியவேண்டுமானால் அவருடைய குருநாதரைப் பற்றியும் அறிந்தே தீரவேண்டும். ஒரு விஞ்ஞான சாஸ்திரி எங்ஙனம் பலதிறப்பட்ட ஆராய்ச்சிகளின்மூலம் பொது விதிகளாகிய உண்மைகளைக் கண்டுபிடிக்கிறாறோ அங்ஙனமே பகவான் ராமகிருஷ்ணரும் பல்வேறு சமயநெறிகளிற் பயின்று ஒரு பொதுவிதியாகிய சமரச தர்மத்தை நிலைநாட்டினார்.

ராமகிருஷ்ணருடைய புத்துயிர்பெற்ற இந்துமதக் கொள்கைகளைப் பரப்புவதற்குச் சுவாமி விவேகாநந்தர் தோன்றினார். தனது குருநாதனின் கொள்கைகளைச் சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் உரைகற்களில் பரீசோதித்துப்பார்த்து, எல்லாப் பரீக்ஷைகளிலும் திருப்தி யடைந்தபின்னரே குருநாதரின் மீளா அடிமையானார். ராமகிருஷ்ணர் இம் மண்ணுலகை நீத்த பொழுது தனது ஆத்மஞானச் செல்வத்தைச் சுவாமி விவேகாநந்தருக்கு வழங்கி, அதைக்கொண்டு அருட்பணி செய்யும்படி வேண்டிக் கொண்டார்.

குருநாதர் அருட்பணி என்னவென்று அவருக்குப் புலப்படவில்லை. அதை அறிவான்பொருட்டு இமயமலை தொடக்கம் குமரிமுனை வரை பாதசாரியாக இந்திய நாடெங்கும் சுற்றித் திரிந்தார். அக்காலத்து இந்திய

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம்: பார்த். மாசி கஉ

## இந்தியாவின் விடுதலை

இந்தியா இவ்வருடம் முடிவதன் முன் சுதந்திரம் பெறுமென்பது பலருடைய அபிப்பிராயம். இந்நாட்டின் இப்போதைய நிலையை நோக்குமிடத்து, வேறுவிதமாக எண்ண விடமில்லை. சுதந்திர ஆவேசமே இந்தியாவின் எப்பாகத்திலும் மிகத் துரிதமாக மக்களைப் பிடித்து நிற்கின்றது. இனி ஒரு கணப்பொழுதுக்குத்தானும் பிரிட்டிஷ் அரசினர் தாமதஞ் செய்ய இடமில்லை. பிரிட்டிஷ் மந்திராலோசனைச் சபையினர் இதை முற்றாக உணர்ந்து விட்டனர். இவ்விஷயமாக எவ்வளவு தாமத மேற்படுகின்றதோ, அவ்வளவுக்குத் தீமை வந்தெய்தும் என்பதும் நிச்சயம். உலகிலுள்ள நாடுகள் யாவற்றிலும் நவமான புரட்சிகளும மாற்றங்களும் நிகழ, இந்தியா மாத்திரம வாளாவிருக்குமென எண்ணுவது தகுமா? முறையா?

தமது கடமையை நிறைவேற்றுதற்குப் பிரிட்டிஷ் அரசினர் மந்திரிசபையில் ஸ்தானம்பெறும் மூவரை அடுத்த மாதம் இந்தியாவுக்கு அனுப்புவதாகச் சித்தஞ் செய்து விட்டனர். இவர்களுள் ஒருவர் இந்தியா மந்திரியாகும் மிஸ்டர் பெதிக் லோறென்ஸ் அவர்கள். இவர்கள் மூவரும் இராசப் பிரதிநிதியுடன் சேர்நது இந்திய அரசியற்றிட்டத்தை வகுக்க முயற்சிகள் செய்வார்கள். மேலும இந்தியாவிற்குச் சுதந்திரத்தை வழங்கும அதிகாரமும் இம் மூவருக்கும் உளவுக்குணடாம். எனவே, புதிய அரசியற்றிட்டத்தை வகுக்கும் விஷயத்தில் லண்டனை நோக்காது வேண்டியதை இந்தியாவில் இவர்கள் செய்யுமதிகார முடையாராம். எனினும், இவர்கள் எப்படியாகத தமது கடமையை இனிது ஆற்றுவாரென்பது கூற வியலாதாகின்றது. இந்தியாவிலுள்ள வகுப்புக் கட்சிகளின் தலைவருடன் ஆலோசித்து இயன்றளவு எல்லோரையும் திருத்திப்படுத்தக் கூடிய ஓர் திட்டத்தையே வகுப்பார்போலும்.

இந்தியாவிலுள்ள தலைவர்களின் அபிப்பிராயத்தைப் பிரிட்டிஷ் அரசினர் இதுவரையும் அறியாதிருக்கவில்லை. காங்கிரஸ் கட்சியினரின் கொள்கை யாது? முஸ்லீம் லீக்கின் கொள்கை யாது? மற்றைய சிறிய கட்சியினரின் எண்ணங்கள் யாவை? என்பன யாவரும் நன்கறிந்த விஷயங்கள். இவைகளைக் குறித்து மேன்மேலும் கட்சித் தலைவர்களுடன் வாதித்து முடிவுக்கு வரலாமென்பது நடவாத விஷயம். எவருடைய நற்புத்திகட்கும் இணங்காத ஜனுப் ஜின்னுவை இணங்கச் செய்வதென்பது இலகுவில் முடியுமா? இவ்விஷயம் இராசபபிரதி முதல் பிரிட்டிஷ் மந்திரிசபைவரையும் யாவரும் அறிந்த விஷயமாகும். எனவே, சமாதானப் பேச்சிற் காலத்தைப் போக்காது, செய்யவேண்டியதைச் செய்வதில் பிரிட்டிஷ் அரசினர் சடுதியில் ஆரம்பித்தல் வேண்டும்! இந்தக் கொடிய வகுப்புவாதிக்காக இந்திய சுதந்திரம் இனி ஒருகணப் பொழுதுக்கும் பின் போடத்தக்க விஷயமன்று.

எனவே, மாகாணச் சபைகள் தெரியப்பட்டவுடன் உடனே ஓர் மத்திய அரசாங்கத்தை அமைத்துப் பின் அதைத் தொடர்ந்து அரசியலமைப்புச் சபையையும ஏற்படுத்துவதே முறையாகும். ஆனல், எல்லாவற்றிற்கும் முதலாக இந்தியாவை இருகூருகப் பிரிததாற்றான் ஒத்துழைக்க முன்வருவதாக ஜனுப் ஜின்னு ஏற்கனவே சொல்லி விட்டார். இந்தியாவுக்கு வரவிருக்கும் இந்திய மந்திரியாரும், மற்றையோரும் இதற்கு இணங்குவாரென நாம் நமபவில்லை. இந்த வகுப்புவாதியைத் திருப்திப்படுத்தவேண்டுமென நினைப்பின் வருங்காரியம் அனுகூலமடையாதென்பது சொல்லாதேபோதரும். அதற்கு மாறாகப் பிரமாதமான கிளர்ச்சிகள் நிச்சயமாக இந்தியாவிற்ருேன்றிப் பேரிடரை யுணடாக்கி நிற்கும். எனவே, இவ்விஷயமாகத் துணிவான முடிவுடன் மந்திரி சபை அங்கத்தவர் இந்தியா செல்கின்ருரென நாம் ஊகிக்கிருேம். நன்கு அறிந்த விஷயத்தை இந்தியாவிற் சென்று யோசிப்பது—முடிவு செய்வது என்பன பொருந்தாத விஷயங்களல்லவா? இவ்விஷயம் இன்னும் பின்போடத்தக்கதுமன்று.

எல்லா வழியாலும் நோக்குமிடத்து, இந்திய மக்கள் பொறுப்பில் அரசாங்கம் வழங்கப்படுவதே மிகவும் பொருத்தமானதாகும். இப்போது இந்தியாவில் தோன்றியுள்ள உணவுப் பஞ்சத்தைச் சாந்தி செய்ய இந்திய மக்களின் அரசாங்கமே சாலவும் உரிமையுடைத்து. துணிவுடன் இந்திய மக்களின் நன்மைக்குரிய விஷயங்களைக் கையாண்டு தீமைகள் சம்பவிக்காது காப்பாற்றுதற்கும். இந்தியர் கையில் அரசாங்கம விடப்பட வேண்டும். இந்தியாவின் தொழில் விருத்தியும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் முன்னேற்றமடையவேண்டியிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை இழந்தால், மறுபடி இந்தியா மீட்சியை அடையுங்காலம் விரைவில் வருமெனக் கூறவியலாது. இரு நூறு வருடங்களாகப் பிரிட்டிஷார் கையில் இந்தியா விருந்தும், எத்துறையிலாவது விரும்பக்கூடிய முன்னேற்றத்தை அந்நாடு அடைந்துளதா? இன்னும் அப்படியான நிலைமையில் வைத்திருக்க வியலாது. இந்தியா பூரண சுதந்திரத்தையடையின், பத்து வருடத்தில் உலக வல்லரசினர் சபையில் முதலணியில் நிற்குமன்றே. போலிச் சாட்டுக்களைக் கூறி இந்திய மக்களின் தொடர்பினையும், நட்பினையும் பிரிட்டிஷார் இழக்காதிருப்பதே நன்று. காலத்திற் செய்ய வேண்டியதைச் செய்து நிறைவேற்ருவிடின் பின் கழிந்ததை நோக்கிப் பரிந்து பரிந்து கவலைப்பட வேண்டியதாகும். பிரிட்டிஷார்க்கு இதுவோர் பொறுப்பான அரிய சந்தர்ப்பம் என்பதை அவர்கள் உணரல் வேண்டும்.

## தேசத்தை மிரட்டும் பஞ்சம்

### காந்திஜீ கூறுவது

இந்திய உணவுநிலைமைபற்றிக் காந்திஜி கூறுவதாவது: மிகக் கஷ்டமான காலம் நம்மை எதிர்நோக்கி நிற்கின்றது. விரும்பினுற் தேசம் அரசாங்கத்தைக் கண்டிக்கலாம். வேண்டின் நானும் அனைவருடனும் சேர்ந்து கொள்ளுகின்றேன். நாட்டு மக்களுக்குச் சேவைசெய்யலாமென இந்திய அரசாங்கம் விரும்பியிருந்தால் சம்பவங்களின் போக்கே மாறியிருக்கும். இந்தியாவைத் தங்கள் தளமாகக் கொண்டு எதிரியை எதிர்த்துப் போராட நேசதேசத் துருப்புகள் இங்கு வந்திருக்கின்றன. இந்தியாவில் இருக்கும் அந்நிய துருப்புகளைக் குறித்து 1942-ம் ஆண்டில் கூறியதையே நான் இன்றும் தெரிவிக்கின்றேன். இந்திய மக்களுக்குச் சேவை செய்வதே அவர்களுடை லட்சியமாக இருத்தல் அவசியம். ஆனல் அவர்கள் இந்தியாவைக் கொள்ளையடித்தார்கள். அரசாங்கம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

# பாதை ஓரத்தில்

★

### பாட்டைசாரி

அரசாங்க டொக்டர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களிற் சிலர் தங்கள் கருமத்திற் கவனமில்லாது இருந்துவிடுகின்றனர் என்பதற்குக் கொழும்பில் நிகழ்ந்த சம்பவமும் ஒரு சான்று. ஆரம்பத்தில் 'நியூமோனியா' நோயாற் பீடிக்கப்பட்ட ஒருவர் இறுதியில் அம்மைநோய் கண்டு இறந்தனர் எனத் தெரிகின்றது. அதிகாரிகளுக்கு இது சங்கதி கடைசிவரை எட்டவில்லையா, என்ன? இதை எதற்காகக் கண்டுபிடியாது விட்டனர் என்பது மர்மமாகவே இருக்கின்றது. இக் கண்கட்டுவித்தையிற் சில உத்தியோகஸ்தர் சிக்குப்பட்டிருக்கின்றனர் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. பணமும் அந்தஸ்தும் செத்தவர்களையும் மீட்குமென்ருல் நியூமோனியாவாற் பீடிக்கப்பட்ட ஒருவரை அம்மைநோயாற் பரலோகமடையச்செய்யும் சக்தியும் பணத்துக்கு இருக்கத்தான் செய்கின்றது.

இது காரணமாகவே வைசூரி நோய் நகரமெங்கும் பரவியதெனச் சொல்லப்படுகின்றது. விசாரணையின் முடிவை இருந்து பார்ப்போம்.

### சமபலம்!

இறைச்சிப்பிரச்சினை கொழும்பில் ஏற்பட்டு விட்டது. கிடைக்கும் இறைச்சியில் மிக மிஞ்சிய எலும்புத் துண்டங்கள் இருப்பதாக எங்கும் ஒரேபுகார். இறைச்சிக்கடைக்காரர் எலும்புகளை அதிகமாகச் சேர்ப்பதற்கு உத்தரவு தரும்படி அரசாங்கததைக் கேட்கின்றனர். கொழும்பில் உள்ளவர்கள் இறைச்சியிலும் "சமபல பிரதிநிதித்துவம்" கிடைக்க வேண்டுமென இப்போது வாதாடுகின்றனர்!! இது விஷயத்தில் 50 : 50 கொள்கையை அரசாங்கம் அனுஷ்டிக்குமா, அல்லது பெரும்பான்மையோரின் கோரிக்கையை ஆதரித்துச் சதைப்பாகத்தை அவர்களுக்குக் கொடுக்குமா வென்பது தெரியாது. அப்படியானுல் சிறுபான்மையோருக்குக் கிடைப்பது எலும்புந் தோலுமா? ஏதோ இறைச்சி விஷயத்திலாவது 'சமபலம்' வேண்டுமென்பது எனதுகட்சி!

### இராசரத்தினம் யோசனை

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் நிகழ்ந்த உபசரணைக்கூட்டமொன்றிற் பேசும்போது நியாயவாதி ஸ்ரீ இராசரத்தினம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'மெதடிஸ்ற்' கிறீஸ்தவர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் கிறீஸ்தபோதனையே போதிக்கப்படுமெனவும் கிறீஸ்த மதத்தைச் சேராத ஏனைய பிள்ளைகளுக்கு அவர்களின் சமயம் போதிக்கப்பட மாட்டாதெனவும் முடிவு செய்திருக்கின்றனர். இது சரிதான். ஒவ்வொரு சமயப் பள்ளிக்கூடமும் அதற்குரித்தான சமயத்தைப் பிள்ளைகளுக்குப் போதிப்பதே நீதி. அப்படியானுல் அப் பள்ளிக்கூடங்களிற் பயிலும் ஏனைய பிள்ளைகளுக்கு அரசாங்கம் நன்கொடைப் பணம் உதவக் கூடாது.

ஸ்ரீ இராசரத்தினம் கூறுவது முழுதும் உண்மை. அரசாங்கம் இவ்வழியை அனுஷ்டித்தாற்தான் மிஷனரிகளிட மிருந்து தப்ப முடியும்.

### "பூர்வ பரிஷத்"

ஹரன் கோஷ் நடனக்கோஷ்டியினர் இப்போது இலங்கையில் நிற்கின்றனர். இவர்களின் நடனம் அற்புதமாக விருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைகள் போற்றிப் புகழுகின்றன. மாதவமேனன் என்பவரின் நடனம் கலையின் உச்சத்தைத் தொட்டுவிடுகின்றதெனத் தெரிகின்றது. பின்னணிச் சங்கீதம், சகல நிகழ்ச்சிகளிலும் ஏற்றமுறையில் சிறப்பாக அமைந்துவிடுகின்றதாம். இயைபு இசைநயம் ஒரு தனிச்சிறப்பென்ருல் அப்புறம் பேசவும் வேண்டுமா? "பூர்வ பரிஷத்" என்றகாவிய நடன சித்திரத்தைப் பார்த்த ஒருவர் பின்வருமாறு ஆங்கிலப்பத்திரிகை ஒன்றிற் கூறுகின்ருர்; "உடல் வனப்பும், இசையும், தாள அமைதியும், வர்ண அமைப்பும் அதிஉன்னதமாகப் பின்னப்பட்டிருக்கின்றன. இதை வர்ணிப்பதாகில் ஒளிப்பிளம்பிற் தூரிகையைத் தோய்த்து வானவில்லிற் சித்திரம் தீட்டவேண்டும்."

'பூர்வ பரிஷத்' வடமொழிப் பெயர். தமிழில் 'ஆதிகாலக் கலாநிலையம்' என்று சொல்லலாமல்லவா? ஹரன் கோஷ்டியினர் அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வருகின்றனர். நேரிற்பார்த்து அனுபவிப்போம்.

### மதிப் பெடுப்பு

யாழ்ப்பாணப் பட்டினத்தில் மதிப்பெடுப்புப் பெரிய சில்லெடுப்பைத்தான் உண்டுபண்ணி யிருக்கின்றது! விதானைமார் தம்முடன் ஒத்துழைக்க மறுக்கின்றனர் என்று பட்டினசங்கத் தலைவர் புறுபுறுக்கின்ருர். யாழ்ப்பாணப் பட்டினம் ஒன்பது சதுர மைல் விஸ்தீரண முள்ளது. 50,000 க்கு அதிகமான மக்கள் இங்கு வதிகின்றனர். மதிப்பெடுப்பைக் கணிப்பவர்களுக்கு அந்த வேலையில் நல்ல பரிச்சயம் இல்லையெனச் சொல்லப்படுகின்றது. 175 உத்தியோகஸ்தர்கள் இந்த வேலைக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இருந்தும் சீரான முறையில் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணப் பட்டினத்தில் மதிப்பெடுப்புக் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. இச் சீர்கேடுகளுக்கு யார் பொறுப்பு? பட்டினசங்கத் தலைவரா? அன்றேல் பயிற்சியற்ற உத்தியோகஸ்தர்களா? மாகாண அதிபர் இவ்விஷயத்தில் புத்திகூறி உதவி செய்வது மிக மிக அவசியம்.

### பௌத்த சங்கடம்!

பௌத்தர்கள் அரசியலில் ஈடுபடுவது தகாதென மெண்டிஸ் என்னும் சிங்களர் ஒருவர் ஒரு கூட்டத்திற் பேசியிருக்கின்ருர். பிக்குகள் கலியாணத் தரகர்களாகவும் முயற்சி செய்கின்றனர் எனவும் இவர்கள், தங்களுக்குரித்தான சேவைகளைச் செய்வது தான் உகந்ததெனவும் அவர் பிடுங்கி யடுக்குகின்ருர். பௌத்த பிக்குகளை யெல்லாம் அரசியற் பங்குபெறச் செய்தவர் கல்விமந்திரி கன்னங்கரா என்று மந்திரிமீது பழிசுமத்தப் படுகின்றது. ஸ்ரீ சேனநாயகாவே முன்வந்து பௌத்த சங்கத்தைத் தூய்மைப் படுத்தவேண்டுமென அக் கூட்டத்தில் முடிவுசெய்யப் பெற்றிருக்கின்றது. இதற்கிடையில் பிக்குகள் ஒன்று திரண்டு ஸ்ரீசேனநாயகாவை ஒதுக்கப் போகின்றனர் என்ற செய்தியும் எட்டியிருக்கின்றது. புத்தம், சங்கம், சரணம், கச்சாயாமி!!

### மலாய அனுபந்தம்

அதென்ன 'ஈழகேசரி மலாய அனுபந்தம்' என்று வட்டுக்கோட்டை மாணவன் ஒருவர் ஒரு கடிதம் எழுதியிருக்கின்ருர். ஈழகேசரி மலாயஅனுபந்தத்தில் யாழ்ப்பாணப் புதினம் ஒன்றைப் படித்த ஓர் அன்பர் தாம்குறித்த செய்தியை 'ஈழகேசரி மலாய அனுபந்த'த்திற் படித்ததாக வட்டுக்கோட்டையிலுள்ள தமது மருகனுக்குக் கடிதம் போட்டிருக்கின்ருர். மாணவனின் வீட்டுக்கும் ஈழகேசரி செல்வதுண்டு. பத்திரிகை முழுவதையுந் தட்டிப்பார்த்த மாணவன் அப்படி எதுவும் அங்கு இல்லாததைக் கண்டு எமக்கு எழுதியிருக்கின்ருர் விபரம் அறிவதற்காக. ஆம்; மலாய அனுபந்தம் இலங்கை, இந்தியா போன்ற இடங்களிலுள்ளவர்களுக்கு அனுப்பப்படுவதில்லை. அனுபந்தத்தைப் பார்க்க விரும்புவோர் ஈழகேசரிக் காரியாலயத்துக்கு ஞாயிற்றைத் தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை இரண்டு மணிபோல் வந்துபார்க்கலாம்.

### நமது வாசிகசாலை

**பின்வந்த நூல்கள்**

**பாடசாலை நிர்வாகம்** ஆசிரியர்: M. S. சுந்தரேசுவரன் M. A. L. T., கோயமுத்தூர்.

**குழந்தைத் தன்மையும்** கல்விப் பயிற்சியும் M. S. சுந்தரேசுவரன்.

**தாய்மொழிப் போதனை** M. S சுந்தரேசுவரன்.

**கிராமச் சீரமைப்பு** M. S. சுந்தரேசுவரன்.

**பூகோளபாட போதனை** ஆசிரியர் R. இலட்சுமிநரசிம்மன் M. A., L. T., அரசாங்கபோதனுமுறைப்பாடசாலை மேட்டூர்.

**சரித்திர போதனையும் ஆட்சி நூல் போதனையும்:** R. இலட்சுமிநரசிம்மன். மேற்கண்ட நூல்களின் பதிப்பாளர்: நாஷனல் பப்ளிஷிங்கம்பெனி: 12, சகண்டு, லைன்பீச்சு, சென்னை, இலங்கையில் விற்பனையாளர்: யாழ்ப்பாணம் நாஷனல் ஏஜென்ஸி [ The Jaffna National Agency ] சுன்னுகம், தனலக்குமி புத்தகசாலையிலும் ஏனைய புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

●

**கந்தபுராணத்திரட்டு:—** அசுர காண்டமும், மகேந்திர காண்டமும் [பாட்டும் பயனும்] தொகுத்தவர் ரா. பி. சேதுப்பிள்ளை. பக்கம்: 190. விலை: ரூ. 1 - 14 - 0

**என் சரிதம்:—** (சுருக்கம்) மோ. க. காந்தி பதிப்பாசியர்கள்: மகாதேவ தேசாய், ஹரிபாவூ உபாத்தியாயர். மொழிபெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ. பக்கம் 230. விலை: ரூபா 3—8—0.

**கதைக்கோவை:—** தொகுதி IV. 75எழுத்தாளர்கள் எழுதியவை. பக்கம் 518. விலை: ரூபா. 10—8—0.

**காந்தி காட்டும் பாதை:—** 'ஹனுமான்' உதவி ஆசிரியர் கே. எஸ். ஜம்புநாதன் தொகுத்தது. பக்கம் 50; இரு பதிப்பு: கைக்காகிதம் விலை: அண 8. மலிவுப்பதிப்பு. அண 6; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

●

**இரணியன் அல்லது இணையற்ற வீரன் (ஓர் நாடகம்)** ஆசிரியர்: பாரதிதாஸன் பக்கம்: 96; விலை: சதம் 95.

**பெண் ஏன் அடிமையானுள்:** ஆசிரியர்: பெரியார் ஈ. வே. இராமசாமி; பக்கம்: 96; விலை: சதம் 65.

**அரிச்சந்திரன் பொய்கள்:** ஆசிரியர்கள்: க. அயோத்திதாச பண்டிதர்; ம. அரங்கசாமி பண்டிதர். பக்கம்: 40; விலை: சதம் 25.

**என். எஸ். கிருஷ்ணன்:** ஆசிரியர்: தோழர் வ. ரா. பக்கம்: 18; விலை: 25; மேற்போந்த நான்கு நூல்களும் இலங்கையிற் கிடைக்குமிடம்: சாது நிலயம், 159, காலிவீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் உரிமைகள்

## கலைஞன் சஞ்சீவி ராவ் கருத்து

கதிரையிற் சௌகரியமாக இருந்தவண்ணம் ஆங்கில நூல் ஒன்றை அவதானத்துடன் படித்துக்கொண்டிருந்தார். 'நமஸ்காரம்' என்று சொல்லி பெயர் பொறித்த சிறு இதழை நீட்டினேன். ஈழகேசரி ஆங்கிலப் பத்திரிகையா தமிழ்ப்பத்திரிகையா என்று மெல்லிய குரலிற் கேட்டார். தமிழ்ப் பத்திரிகையென்றேன். சம்பாஷணை ஆங்கிலத்திற் தான் நிகழ்ந்தது.

''என்ன சமாச்சாரம்'' என்றார் புன்னகை தவழும் முகத்துடன்.

''இல்லைத் தங்களைப் பேட்டி காணலாம் என்று வந்தேன்''.

''இப்படிச் சங்கடத்துக்குள் மாட்டிக்கொள்வதை நான் அதிகம் விரும்புவதில்லை என்றார், கையில் இருந்த புத்தகத்தை நாற்காலியின் கைத் தாங்கியில் வைத்துவிட்டு. ஆமாம், ஸ்ரீ சஞ்சீவி ராவ் விளம்பரத்தை விரும்புபவர் அல்ல. அமைதியாகவிருந்து பணி செய்வதில் நம்பிக்கையுள்ள அறிஞன். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவிற் பங்குபெறுவதற்காக வந்தார்.

இந்தியக் கல்விப் பகுதியில் அநேக காலம் உழைத்தவர். காசி மகா ராணி (குவீன்ஸ்) கல்லூரியின் அதிபராகவுமிருந்தவர். தற்கால உளநூல் ஆராய்ச்சிகளுக்கேற்ப அநேக பள்ளிக்கூடங்களையும் காசி நகரில் அமைத்திருக்கின்றார். அகநூல் அறிவு கைவரப்பெற்றவர். கல்வி சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு அத்துறையிற் பக்குவம் பெற்றுள்ளார். டொக்டர் அன்னி பெஸன்ட் அம்மையாருடனும் வரகவி தாகூர் போன்ற அருங்கலைவாணர்களுடனும் அதிககாலம் உழைத்தவர். பிரம்மஞான ஸ்தாபனத்தைச் சேர்ந்த இக் கல்வி நிபுணர் தன்னடக்கம் மிக நிறைந்தவர். கன்னடம் இவரது தாய்மொழி.

''இலங்கையில் இப்போது இலவசக் கல்வி ஏற்பட்டிருக்கின்றது. இதுபற்றித் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்'' என்றேன். அவர் கூறினர்:

''எந்த நாடும் இலவசக் கல்வியை வரவேற்கும். எனது அபிப்பிராயத்தின்படி மனிதனின் மூலாதாரமான உரிமைகள் மூன்று. ஒன்று: உலகில் வாழும் உரிமை. இரண்டு: சுயேச்சையுடன் சுதந்திரமாக வாழும் உரிமை. மூன்று. பரிபூரண வாழ்க்கையை நடத்தும் உரிமை. எந்த நாடும், எந்த அரசாங்கமும் இம் மூன்று மூலாதாரமான உரிமைகளையும் சகல மக்களுக்கும் உதவவேண்டும். இவற்றைச் சார்ந்து சில சிக்கல்களுமுண்டு. அவையாவன: உண்ண உணவும், உடுக்கத் துணியும், வதிய வீடும், மனிதனுக்கு வேண்டப்படுவன. இவை கிடையாதவிடத்து அவன் உலகில் வாழமுடியாது இவற்றோடுகூடத் தனக்குச் சொந்தமான முயற்சியைப் பூர்த்தி செய்து அதில் மனநிறைவு பெறும் உரிமையும்அவனுக்குக் கிடைக்க வேண்டும். பரிபூரண வாழ்க்கையை நடத்துவதற்குக் கல்வி ஏதுவாகவிருக்கின்றது. எனவே, இது அவனுடைய மூலாதார உரிமைகளில் ஒன்று. இதை உதவுவது அரசாங்கத்தின் மூலாதாரமான கடமைகளில் ஒன்று.

''இவ்வாறு தமது கடமையை அரசாங்கம் நிறைவேற்றுமிடத்து, நாட்டில் நிலவும் ஏனைய கல்வி ஸ்தாபனங்கள் விபரீதமாகப் பாதிக்கப்படும். தனிப்பட்டோரால் நடாத்தப்படும், பள்ளிக்கூடங்கள் இவற்றையெல்லாம் சமாளிப்பதுடன் பரித்தியாகமுஞ் செய்யவேண்டுமென்பது எனது தெளிவான கருத்து.

''இலவசக் கல்வித் திட்டம் அநேக விளைவுகளைக் கொடுத்தேதீரும். அத்துடன் அதன் மகத்துவங்களையும் விரல்மடித்து எண்ணிவிடமுடியாது. எனவே, என்னைப் பொறுத்தவரையில் இலவசக் கல்வியால் ஏற்படும் விளைவுகளை எவ்வாறு சீர்பெறச் செய்யலாமென்பதைப்பற்றி இப்போது நான் ஒன்றுங் கூற விரும்பவில்லை'' என்று அழுத்தமாகத் தனது கருத்தைத் தெரிவித்தார்.

''சரி, இப்போது இவை போதும். இன்னுமொன்று கேட்கின்றேன்: இலங்கைவாழ் இந்தியர்கள் தங்களுக்கு இலங்கையிற் பிரஜா உரிமை வேண்டுமென்று நிற்கின்றார்களே; இதுபற்றித் தாங்கள் அபிப்பிராயங் கூறவேண்டும்'' என்றேன்.

ஸ்ரீ சஞ்சீவி ராவ் சிறிது யோசித்தார். இதுசம்பந்தமான சகல விபரங்களையுந் தாம் அறியவில்லையென்றும், இருந்தபோதிலும் பொதுவான சிலவற்றைக் கூறுவதாகவுஞ் சொல்லி ஆரம்பித்தார்.

''என்னைச் சந்தித்த ஒரு சிங்கள அன்பரும் இதே கேள்வியைக் கேட்டார். பூரண பிரஜா உரிமை வேண்டுமென இந்தியர் கேட்பதாக அவர் தெரிவித்தார். பிரஜா உரிமைபற்றி எனது பொது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றேன். இலங்கையில் நிரந்தரமாகவிருந்து இந்நாட்டு மக்கள் வாழ்வுடன் பொருந்தி வாழும் இந்தியர்கள் பிரஜா உரிமைகளுக்கு அருகராவர். இனி, எத்தகைய உரிமைகளுக்கு இன்னோர் உரித்தானவர்கள் என்பது தீர்க்கமாக ஆராய்ந்து முடிவுகட்டவேண்டிய விஷயம். இது சம்பந்தமாக நான் பிரயோசனமுள்ள அபிப்பிராயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்க முடியாத நிலையில் இருக்கின்றேன். நான் அறிந்த வரையில் பிரஜா உரிமைகளைப் பெறுவதற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பதிற் சங்கடப்பட வேண்டியிருப்பதாகத் தெரிகின்றது.

''எப்படியிருந்தபோதிலும இரு நாடுகளுக்கும் நல்லெண்ணமும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் நிலவுமாகில் இப்பிரச்சினையை இலகுவாகத் தீர்த்துவிடலாம்'' என்று உறுதியுடன் சொல்லிமுடித்தார் ஸ்ரீ சஞ்சீவி ராவ்.

''எங்கள் பல்கலைக் கழகத்தைத் தரிசித்தீர்களா; எப்படியிருக்கின்றது'' என்றேன் புறப்படும்போது.

''என்ன? பல்கலைக் கழகமா? அது எங்கே இருக்கின்றது? பேராதனையில் இனித்தான் தோன்றவிருப்பதாகச் சொல்லுகின்றார்களே!'' என ஹாஸ்யத்துடன் விடையிறுத்தார் இந்தக் கல்வி நிபுணர்.

— அரியரத்தினம்


கொழும்பு மக்களை வசிகரித்த

# சங்கீத-நடன கோஷ்டி



கவீந்திரர் தாகூர், உதயசங்கர் சிஷ்யரான ஹரன் கோஷ் அவர்களதும் ஏனைய 25 கலைஞர்களதும்

# 'பூர்வ பரிஷத்'

என்னும் காவிய நடன சித்திரம்

1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம், 3-ந் தேதிகளில்

மாலை 7 மணிக்கு

## யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறும்

- மாதவ மேனன் (அதிபர், பூர்வபரிஷத்)
- ப்ாலகிருஷ்ண மேனன் (சாந்தி நிகேதன் நடன கலாசாலைத் தலைவர்)
- தாருங் குமார் (மணிபுரி)

- சித்திரா, சக்தி, பிரிதி (சினிமா நட்சத்திரங்கள்)
- சரஸ்வதி, பிலஷ்மி, கமலா (மணிப்பூர்)

ஆகிய பெண்மணிகளின் அற்புத நடனங்கள் ஒரு தனிச் சிறப்பு.

டிக்கற் விபரம்: றிசேவ்ட்: ரூபா 5-00
ஏனைய வகுப்புகள்: ரூபா 4/-, 3/-, 2/-.


# இந்திய மறுமலர்ச்சி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடெய்தியிருந்த நிலைமையை அவர் கண்ணாரக் கண்டார். மன்னர் மாளிகைகளிலும் வசித்தார்; வறிஞர் குடிசைகளிலும் வாழ்ந்தார். இருபாலாருடைய வாழ்வின் தாரதம்மியத்தை உணர்ந்தார். ''பசி, பசி'' என்று அலறும் பட்டினி மக்களின் ஓசை ஒருபுறம்; தம் மானத்தைக் காப்பாற்றுவதற்காகத் ''துணி, துணி'' என்று அலறும் கற்புடைமகளிர் சத்தம் மற்றொருபுறம். அறியாமையானது மக்களை வைத்து இருள்போல் சூழ்ந்துவிட்டது. இக் கோரக் காட்சியைக் கண்டு சுவாமி இரத்தக்கண்ணீர் சிந்தினார். மன்னரிடமும், பெரியவரிடமும் இவ்வருந்தும் மக்களுக்கு ஏதாவது உதவி புரியும்படி வேண்டினார். ஆனால் அவர்களிடமிருந்து உதட்டு உதவியே கிடைத்தது. யாத்திரை கன்னியா குமரியுடன் முடிவுற்றது. கன்னியா குமரி அன்னையைப் பார்த்தவண்ணம் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தார். அத் தியானத்தின்போது, அவருக்குப் பண்டைய பெருமைவாய்ந்த இந்தியாவின் காட்சியும், சிறுமையெய்தியிருக்கும் நிகழ்கால இந்தியாவின் காட்சியும் புத்துயிர் பெற்று எழப்போகின்ற ஒளி பொருந்திய, எதிர்கால இந்தியாவின் காட்சியும் மனக் கண்முன் தோன்றின. தனது குருநாதரின் அருட்பணி மக்களுக்குப் பணிசெய்யவேண்டியது தானென்றுணர்ந்தார். தொண்டாற்றுவதற்குப் பணத்துக்கு வறிய இந்தியாவை எதிர்பார்த்துப் பயனில்லை; ஆகையால் மேனாடுசென்று ஆத்மஞானத்தைப் போதித்து அவர்களிடமிருந்து பணஞ் சம்பாதித்து இந்திய மக்களுக்கு நிவாரணவேலைகளைத் தொடங்கலாமென யோசித்தார். அத்தருணத்தில் தம் மனம் போல் செய்வதற்கு ஒரு அரிய சந்தர்ப்பங் கிடைத்தது.

அமெரிக்க நாட்டிலுள்ள சிக்காகோ என்னும் நகரிலே ஒரு சர்வமதமகாசபை 1893-ம் ஆண்டு நடந்தது. அக்கூட்டத்துக்கு உலகின் பலபாகங்களிலுமிருந்து பல சமயப் பிரதிநிதிகளை அழைத்து, அவரவர்களுடைய மதக்கோட்பாடுகளைப்பற்றிப் பேசும்படி கேட்கப்பட்டனர். இந்து சமயப் பிரதிநிதியாகச் சுவாமி விவேகானந்தர் போயிருந்தார். ஏனைய பிரதிநிதிகள் தத்தம் மதப் பெருமைகளை எடுத்துக் கூற, சுவாமிகள்மட்டும் இந்து தர்மத்தின் சிரோமணிபோன்று விளங்கும் சமரசத்தைப் பற்றிப் பேசி அமெரிக்கமக்களின் மனதைக் கவர்ந்தார். இத்தகைய மகத்தான வெற்றியைக் கீழ்நாட்டவனொருவன் பெறுவானென்று இந்த மகாசபையைக் கூட்டிய மேனாட்டுப் பிரமுகர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அப்படி எதிர்பார்த்திருந்தார்களாயின் இத்தகைய ஒரு மகாநாட்டைக் கூட்டியிருக்கவே மாட்டார்கள். விவேகானந்தர் மேனாட்டிலே பெற்ற இந்த மகத்தான வெற்றியானது, அக்கினிக் குண்டுகளை வீசி ஐரோப்பாவில் பெற்ற வெற்றியைப் பார்க்கிலும், அணுப்பிரளயக் குண்டை ஜப்பானில் வீசிப் பெற்ற வெற்றியைப் பார்க்கிலும் பன்மடங்கு விசேஷமானது. இச் சம்பவம் இந்திய சரித்திரத்தில் மட்டுமன்றி, உலகசரித்திரத்திலும் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க சம்பவம். இவ் வெற்றியால் உலகிலே தம்மிலும் ஒப்பாரும்மிக்காருமில்லையென்றெண்ணும் மேனாட்டவரின்செருக்கு சிதறடிக்கப்பட்டது. இந்தியர் ராஜீய விஷயங்களில் தமக்குக் கீழ்ப்பட்டிருந்தபோதிலும் ஆத்மீக விஷயங்களில் தமது எஜமானரென்று ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. ''நான் அடிமை; நான் சிறியன்; என்னாலாவதொன்றில்லை'' யென்று தலைகுனிந்த வண்ணமாய்ப் பல்லாண்டு பாடித்திருந்த ஒவ்வொரு இந்தியனையும் தலைநிமிர்ந்து ''நாமார்க்குடியல்லோம் நமனையஞ்சோம்'' என்னும் புதிய பல்லவியைப் பாடும்படி செய்ததும் இவ்வெற்றியேயாம்.

மக்களிடையே ஏற்பட்ட இந்த உற்சாகமாகிய சக்தியைத் தனது நிர்மாணத் திட்டத்துக்குப் பயன்படுத்துவான்கருதி, ஆங்காங்கு சுவாமிகள் ஆற்றிய பிரசங்கங்களில், உணர்ச்சி ததும்பும் மொழிகளிலே, தனது எண்ணங்களைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். அவர் சென்னையில் செய்த ''எனது போர் முறை'' என்னும் சொற்பொழிவில் இந்திய மறுமலர்ச்சித் திட்டம் மிளிர்கின்றது.

(தொடரும்)


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி

## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியில் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையில் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கியிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 நபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 நபாவுக்குக் கூடியும் 10,000 நபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 நபாவுக்குக் கூடியும் 50,000 நபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும; 50,000 நபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

(2619)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய அன்பர்களுக்கு—VIII "சுயா"

# கீரிமலைத் தீர்த்தம்

நாங்கள் குஷியாய்ப் போய் ஸ்நானம் செய்து திரும்பும் இடமல்லவா? புராணங்களிலும் இதிகாசங்களிலும், புகழ்ந்து சொல்லப்பட்டக்ஷேத்திரமல்லவா? அதற்கு இந்த யுத்தகாலத்தில், மிலிற்றறிகாரர் என்ன தலைமுழுக்குப் போட்டுவிடுவார்களோ என்று நீங்கள் விசனப்பட்டுக் கொள்வீர்களாக்கும். இந்தத்தீர்த்தத்தைப் பற்றி உங்களுக்கு அவ்வளவு கவலையில்லாவிட்டாலும், இந்தத் தீர்த்தத்தையே சாட்டாக வைத்துக்கொண்டு போய், அந்தப்பக்கங்களிலுள்ள, கள்ளுத்தீர்த்தத்தை அருந்திவந்தோமே. அது கூடக்கிடையாமற்போய்விடுமோ, என்பதுதான் சிலவேளை உங்களிற் சிலருக்கு முக்கியமான கவலையாகஇருந்தாலுமிருக்கக்கூடும். மற்ற இடங்களைக் கபளீகரம் செய்ததுபோல, மிலிற்றறிகாரர் இந்த இடத்தையும் கபளீகரம் செய்து விடவில்லை யென்றும், காங்கேசன்துறையில் வைக்க எண்ணும் காசநோய் வைத்தியசாலையைப் பற்றிப் பேசும்போதெல்லாம், இந்தக் கீரிமலைத் தீர்த்தத்தின் பெயரும் இழுத்தடிபட்டுப் பேசப்பட்டு வருவதால், இதைப்பற்றி இந்த வாரம் உங்களுக்கு எழுதவெதென்றும், எண்ணினேனே தவிர, அந்தத் தீர்த்தமும், அதன் அண்மையிலுள்ள கள்ளுத் தீர்த்தமும் என்றும் அழிவற்ற சிரஞ்சீவிகளாகவே இருநது வருகின்றன என்றும், உங்களுக்குச் சொல்லிவைக்கின்றேன். இதிலும் ஒருவிசேஷமென்ன வென்றால், இங்கே கோடைகாலம் தொடங்கிவிட்டது. இந்தக் கோடைகாலத்தில் இத் தீர்த்தத்தில் அவ்வளவு நீர்ப்பெருக்கிராது. ஆனால் மற்றத்தீர்த்தம் அதாவது கள்ளு, அது இந்த நாட்களிற் தான் பெருக்கெடுக்கத் தொடங்கும்; வேண்டுமானால் முதற்கப்பலில் வந்து சேருங்கள்.

புராணங்களிற் புகழ்ந்து சொல்லப்பட்ட தீர்த்தமல்லவா? அதிலும் மேலாக என்ன சொல்லக்கிடக்கின்றது, என்று நீங்கள் எண்ணக் கூடும். புகழ்ந்து சொல்ல முடியாவிட்டாலும், இகழ்ந்து சொல்ல என்னால் முடியுந்தானே! இலங்கையிலுள்ள ஒவ்வொரு சமயத்தவர்களும், எமது எமது என்று கொண்டாடும் பெருமைவாய்ந்தது இக்கீரிமலைத் தீர்த்தம். இலங்கையிலுள்ள எல்லாச்சமயத்தவர்களாலும், தமது, தமது என்று சொந்தம் பாராட்டக்கூடிய பொதுவான வேறு தீர்த்தம் இங்கு எங்குமேயில்லை. உலகில் வேறிடங்களிற் கூட இராது என்று நான் எண்ணுகின்றேன். உலகின் மற்றைய பாகங்களிலிருந்து யார் இலங்கையைச் சுற்றிப் பார்க்கவந்தாலும், அவர்கள் ஒருமுறை இந்தத்தீர்த்தத்தையும் பாராமற் போவதில்லை. இவ்வகையாக உலகினரின் புகழைப் பெற்ற இப்புண்ணிய தீர்த்தம், எங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருப்பதையிட்டு யாழ்ப்பாணமக்கள் பெருமைப்பட வேண்டாமா? இதைப்பற்றி, நான் ஏதும் தப்புத்தண்டாவாகச் சொல்லிவிட்டால், யாழ்ப்பாணமக்கள் என்னைச் சும்மா விட்டுவிடுவார்களா?

முன் ஒருகாலத்தில் மாருதப்புரவீகவல்லி என்றொரு பெண், இங்குவந்து, இதில் மூழ்கித் தன் குதிரை முகம் மாறி, அழகிய பெண்முகம் பெறப் போனாளென்று இதிகாசம் சொல்லுகின்றது. இதில் என்ன புதுமையென்று நான் கேட்கின்றேன்! இப்பொழுது, இதில் மூழ்கி எழும்பலர் கழுதை முகத்தோடு போவதை நான் கண்டிருக்கின்றேனே! என்ன! இப்பொழுது இத்தீர்த்தம் தாறுமாறான காரியங்களில் இறங்கிவிட்டதோ என்று கேட்பீர்களாக்கும். இது தீர்த்தத்தின் மகிமையல்ல; தீர்த்தக் கரையிலுள்ளவர்களின் மகிமை. ஏறக்குறையப் பன்னிரண்டு வருஷகாலம் இதன் அண்மையில் நான் இருந்திருக்கிறேன். ஒரே நாளில் இரண்டு முறை கூட இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்திருக்கின்றேன். ஆனால் நான் அதிற் தலைமுழுக்குப் போட்டநாள் எத்தனையோ தெரியாது. "காய்ந்ததெனினும் தலையொழிக் தாடாதே" என்பது எனக்குப் பாடம். என்றாலும், இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும்போதெல்லாம், கற்றதின்படி நடக்க எனக்கு இஷ்டமில்லை, நான் தீர்த்தத்தில் முழுக்குப்போட. அதன்கரையிலுள்ளவர்கள், என் வேட்டிசால்வை, மனிப்பேர்ஸ் இவைகளுக்குத் தலைமுழுக்குப் போட்டுவிடுவார்களே என்று பயம். இப்பொழுது விளங்குகின்றதா கழுதைமுகம் வரும் ஜாலவித்தை எதுவென்று. விளங்காவிட்டால் இன்னுங்கொஞ்சம் விபரமாகச் சொல்லுகின்றேன்.

கொஞ்சப் பெயர் வரையில் இதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட பாடசாலையிற் பயின்று வந்தவர்களைப் போல, அந்தத்தீர்த்தத்தின் கரையோரங்களிற் திரிகின்றார்கள். இந்தக்கூட்டத்திற் பலரகமான ஆட்களுமிருப்பார்கள். இவர்கள், சோம்பேறிகளாய், மார்க்கெட்டில், கசாப்புக் கடைக்காரர் வீசி யெறியும், தோல்வால் குடல் இவைகளையுண்ண, நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டு திரியும் நாய்களைப்போல, ஸ்நானத்துக்குப் போபவர்கள் கொண்டு போயுண்டு, எஞ்சிய பகுதிகளை வாங்கியுண்பதற்காகப் பிற இடங்களிலிருந்து இங்கே வந்து திரிகின்றார்கள். இவர்கள் போக இதன் கரையோரங்களிற் குடியிருக்கிறார்கள் வேறுசிலர். இக்குடும்பங்களிலுள்ள வாலிபர்கள்கூட ஏதும்தொழில் செய்யப் போவதில்லை. இவர்கள் அங்கு போவோர்வருவோர்க்கு ஏதும் ஆக்கிப் போட்டோ, அல்லது வேறு விதமாகவோ தொண்டு தூரவு செய்து, அவர்கள் அடிவயிற்றைத்தடவி, ஏதும் வாங்கி வயிறு வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இவ்விரு சாராரும் வெளிப்பார்வைக்குக் குளக்கரையில், கண்களை மூடிக் கொண்டு, பெரிய மீனின் வருகையை எதிர்பார்த் திருக்கும் கொக்கைப் போலத்திரிவார்கள். ஆனாலிவர்கள், ஏமாந்தவர்களாய், தீர்த்தத்துக்குப் புதியவர்களாய் உள்ளவர்கள், நீரில் நீச்சலடித்தும் நீரிலமிழ்ந்திச் சுழியோடியும், இப்படியெல்லாம் விளையாடும் போது, வேடிக்கைபார்ப்பவர்கள்போல வந்து நிற்பார்கள். தருணம்பார்த்து, அந்த, ஸ்நானம் செய்பவர்களின் துணி மணிகளுக்கும், பண்டம் பாடிகளுக்கும் வேடிக்கை காட்டி விடுவார்கள். ஸ்நானம் செய்து விட்டு அவர்கள் வெளியே வந்து, தம் துணி மணிகளையும், பண்டம் பாடிகளையும் காணாது, கழுதை முகத்தோடு போகாமல் பின எப்படிப் போவது என்று கேட்கின்றேன்! சிலர் கட்ட வேட்டியில்லாமற் கட்டிக்குளித்த ஈரத் துண்டோடு வீட்டுக்குப் போனதையும், சிலர் ஒரு 'கப்' தேநீர் குடிக்கக்கூட வழியின்றி வீடு சென்றதையும், சிலர் 'றிஸ்ட் வாட்ஜ்' போச்சே! நூறு இருநூறோடு மனிபேர்ஸ் போச்சே! என்று தலையிற் கையைவைத்துக் குழறியதையும் நான் அறிவேன்.

எனக்கு இப்பொழுதெல்லாம் இந்தத் தீர்த்தத்திற்போய் நீராடுவதில் அவ்வளவு இஷ்டமில்லை. யாரும் வேண்டியவர்கள் [illegible]தம் செய்தால், அவர்களோடு கூடப்போய்க் கடலிலிறங்கிவிடுவேன். தற்கொலைசெய்வதற்காக வல்ல; நீராடத்தான். ஏன் நான் இக் கேணிப்பக்கம் நாடுவதில்லையென்றால்: தொற்று நோய்க்காரர், நல்லவர்கள் என்ற பேதமேயில்லாது, சகலரையும், இதைப்பரிபாலிப்பவர்கள் நீராட அநுமதித்து விடுகிறார்கள். அழுகிய சிரங்கு நோயுடையவர்கள், இதில் ஸ்நானம் செய்து, தங்கள் சிரங்கைக் கழுவித்தள்ளுகின்றார்கள். இருமல், காசம் முதலிய நோயையுடையவர்கள், இதிலிறங்கி, இருமி இருமி நீரில்உமிழ்கின்றார்கள். இதைப்பார்க்கும் போது அருவருப்பாக இருக்கின்றதே தவிர, கேணியில் ஸ்நானம் செய்ய எப்படி மனம் வரும் சொல்லுங்கள் பார்க்கலாம்!

பெண்களுக் கென்று, சில காலங்களின்முன், இதன் அண்மையில் ஓர் கேணி கட்டப்பட்டிருக்கின்றது. அதில் நான் நீராடியதில்லை; ஆனாற் பார்த்திருக்கின்றேன். இயற்கையைப் படிக்கவென்று சாட்டுவைத்துக் கொண்டு விடுதிப் பாடசாலைகளின் பெண்பிள்ளைகளும், ஆசிரியர்களும், இவர்கள்போவதை அறிந்தவுடன் இயற்கையோடிணையவென்று சொல்லிக் கொண்டு காலேஜுப் பையன்களும், பல முறைகளிலும் சாரி சாரியாகக் கார்களிலும், பஸ்களிலும், இந்தத் தீர்த்தத்தில் நீராடப் போவதுண்டு. இவர்கள் தத்தமக்குரிய கேணிகளில் இறங்கிவிட்டாலோ சீதாதேவியை மீட்டுக் கொண்டு வந்த சந்தோஷத்தில், வானரப் படைகள் தலைகால் தெரியாமற் பாக்கு நீரிணையிற் குதித்தமாதிரித்தான். அப்போது, இந்தக் கேணியிலிருந்து சோப்கட்டிகள் வானவீதி வழியாகக் அந்தக் கேணிக்குப் போவதும், அந்தக் கேணியிலிருந்து சோப்கட்டிகள் அதேமாதிரி, இந்தக் கேணிக்கு வருவதும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அந்த வானரங்கள் பாக்குநீரிணையிற் கற்களை விட்டெறிந்து விளையாடின; இந்த வானரங்கள் சோப் கட்டிகளை விட்டெறிந்து விளையாடுகின்றன. இதுதான் பேதமேதவிர இவ்விருசாரார்க்கு மிடையில் வேறு பேதமேகிடையாது. இப்பொழுதுதான் எங்கும் கோ-எடுக்கேஷன் தொடங்கி விட்டதே; ஒரேகேணிபோதாதா இவர்களுக்கென்று கேட்கின்றேன்!

தீர்த்தத்தின் மகாத்மியம் முடிந்தது. இனிச் சுற்றுப்புறங்களின் மகாத்மியம் தொடங்குகின்றது.

இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர்களுக்குச் சாமானியமாகப் பசி எடுப்பதுகூட. இதில் ஸ்நானம் செய்துவிட்டு, கொண்டுவந்த அன்னத்தில் (களவு போகாது தப்பிவிட்டால்) கொஞ்சம் வயிற்றுக்கு எடுத்துக்கொண்டு, கடற்கரைக்கு முன்னால் நிற்கும், அந்தப் பூவரச மரங்களின் நிழலில் கொஞ்சம் அமர்ந்திருந்தால், சோவென்ற கடற்காற்று வந்து உடம்பிற் படப்பட, சகல அலுப்புகளும், கஷ்டங்களும் நீங்கி, இந்திரலோகத்தில், கற்பக விருட்சத்தின் கீழிருப்பதுபோலவும், அரம்பை, ஊர்வசி முதலிய பெண்கள் கால் பிடித்துக் களைப்பாற்றுவதுபோன்றதுமான உணர்ச்சியுண்டாகும். இப்படிப் பிறர் சுகமனுபவிப்பது, அங்குவந்து திரியும், ஆறுடிகளுக்கும், பக்கங்களிற் குடியிருப்பவர்களுக்கும் விருப்பமில்லையோ என்னவோ தெரியாது. ஐயோ! அந்தத் தூய வெண்மணற் பரப்பு முழுவதையும், மலசல விசர்ச்சனஞ் செய்து கெடுத்துவிடுகிறார்களே, பாவிமக்கள்! எங்கே பார்த்தாலும் மலசலக் கும்பல்தான். குந்தியிருக்க ஒரு பொட்டு நிலங்கூடக் கிடையாது. ஏதோ ஓர் ஆற்றங்கரைக்குப் போனபோது, அதன் தூய வெண்மணற் பரப்பிற் சொக்கிப்போன சிவப்பிரகாச சுவாமிகள் அவ்வாற்று மணலைப் பயன்படுத்த வெண்ணி அதன்மேல், நன்னெறி வெண்பா [illegible]ளாம். அந்தமகான் அவ்வெண் மணற்பரப்பை இப்படி உபயோகிக்க, இங்குள்ள பழிகாரர், இப் புண்ணிய தீர்த்தக்கரையிலுள்ள இவ் வெண்பரப்பை இப்படிக் கெடுத்து விடுகின்றார்களே! இப் புண்ணிய தீர்த்தத்தைப் பரிபாலிக்க, கீரிமலையைச் சுற்றியவிடங்களிலுள்ள கிராமச்சங்கங்கள் பத்து ரூபாவீதம் கொடுத்துதவி வருகின்றனவாம். அப்படியென்றால், இக் கிராமச்சங்கங்களுக்கும், சுகாதார அதிகாரிகளுக்கும் இந்த அலங்கோலங்கள் கண்ணிற் படுவதில்லையா?

"கீரிமலைச் சத்திரத்தின் பெருமை" என்று ஒரு பாட்டோடு தொடங்கலாம் போலவிருக்கின்றது, இங்குள்ள சத்திரங்களைப்பற்றி எழுத. சில புண்ணியப் பிரபுக்கள், இங்கு யாத்திரை போவோர் தங்குவதற்காக, இச் சத்திரங்களைக்கட்டி, அவைகளைக் காவல்காக்கவும், வருவோர் போவோர்க்கு வசதிகள் செய்து கொடுக்கவும், ஆட்களை நியமித்து மாதவீதமவர்களுக்கு வேதனமுங் கொடுத்து வருகிறார்கள். ஆனால், இந்தக் காவற்காரர்களிற் சிலர் வருவோர் போவோர்க்கு அவர்கள் மனங்கோணாத வகைகளிலெல்லாம் வேண்டிய வசதிகள் செய்து கொடுத்துக்கொண்டு வருகிறார்களென்று கேள்வி. சோடி தேவைப் படுபவர்களுக்குச் சோடி சேர்த்துக் கொடுத்தும், அகஸ்மாத்தாக வழி தெருவிற் கண்டவிடத்திற் சோடி சேர்ந்து கொண்டுவரும் சோடிகளுக்கும், அததற்கேற்ற வசதிகள் செய்து கொடுத்தும், மது வேண்டுபவர்களுக்கு மது எடுத்துக் கொடுத்தும், மாமிச உணவை விரும்புபவர்களுக்கு, அதற்கேற்ற வசதிகள் செய்துகொடுத்து அங்கேயே ஆக்கவிட்டும், சூதாடிப் பொழுது போக்க எண்ணுபவர்களுக்கு அதற்கேற்ற ஆட்களைச்சேர்த்துக் கொடுத்தும், இப்படியே எத்தனையோ விதமான வசதிகளையெல்லாம் யாத்திரீகர்களுக்குச் செய்துகொடுத்துத் தங்கள் எஜமானர்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைககிறார்களென்று கேள்விப்படுகின்றேன். ஆகையாற்தான், "கீரிமலைச் சத்திரத்தின் பெருமை ... ..." என்று பாடலாம் என்று எண்ணினேன். நல்லவேளையாக எனக்குத்தான் பாட்டு வராதே.

இங்குள்ள கடைக்காரர்களைப் பற்றி எழுதுவதிலும் பார்க்க எழுதாமல் விட்டுவிடுவதே நல்லது. சகல பாதகங்களுக்கும் இருப்பிடமான இவர்களிற் சிலரைப் பற்றி எதை எழுதுவது . எதை எழுதாமல் விடுவது என்றுதெரியவில்லை. பொதுவாக ஒன்றுமே எழுதாமல்விட்டுவிடுவதுதான் நல்லதுபோல எனக்குத் தெரிகிறது.

முழுவதையும் படித்துவிட்டீர்களா என்ன! இந்த நாலுவருஷ காலத்தில், ஒரு முறையாவது கீரிமலைத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தாலோ என்று நீங்கள் எண்ணியதில்லையா?


சண்முகம் ஸ்ரோர்ஸ்

222, ஆஸ்பத்திரி ரேட் : : யாழ்ப்பாணம்

[புரொப்ரைட்டர்: ஆ. சண்முகராசா]

மஞ்சள் காவி
சிவப்புக் காவி
தீந்தை - எல்லாவர்ணமும்
மை - எண்ணெய்
வார்ணிஷ்
கறையான் எண்ணெய்
கல்வனைஸ் வாளிகள்
கம்பி ஆணிகள்

சங்குப்புரி ஆணிகள் (பித்தளை, இரும்பு)
சில்லாணிகள்
படங்குச் சாக்கு
உருண்டைக் கம்பிகள்
செப்புக் கம்பிகள்
மண்வெட்டிகள்
கோடாலிகள்
பிக்கான்கள்
சவள்கள்

பித்தளை, இரும்பு (எல்லா அளவுகளிலும்)
பிணைச்சல்கள்
திருங்குகள்
கதவுப்பூட்டுகள்
மற்றும் ஆசாரி வேலைக்குரிய ஆயுதங்கள்

இன்னும் பலவிதமான கட்டடங்களுக்கு வேண்டிய சகல சாமான்களும் தொகைக்கும் சில்லறைக்கும் விலை சகாயமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

SHANMUGAM STORES
[PROPRIETOR: A. SHANMUGARAJAH]
GENERAL HARDWARE MERCHANTS
222, HOSPITAL ROAD : : JAFFNA


## அறிவித்தல்

1946-ம் ஆண்டு ஜூன் மீ நடாத்தப்படும் தமிழ் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சைக்கான தகுதி நிபந்தனைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

தமிழ் சிரேஷ்டபாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்திய முஸ்லீம் பரீட்சார்த்திகள், இப்பரீட்சையின் 1-ம், 2-ம் பாகங்கள் இரண்டும் சேர்த்தெடுப்பின், பரீட்சை எடுக்க அனுமதிக்கப்படுவர். 1946-ம் ஆண்டு ஜூன் மாதம் நடக்கும் பரீட்சையில் இரண்டு பாகங்களிலும் சித்தியடையாவிட்டால் இவர்கள் பெயர்கள் சித்தியெய்தியோரின் அட்டவணையில் வெளிவரமாட்டா.

இந்தத் திருத்தத்தின்படி பரீட்சையெடுத்தற்காய விண்ணப்பப் பத்திரங்கள் 28-2-46 வரைக்கும் ஏற்கப்படும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தாம் ஒரு முஸ்லிம்மெனத் தகுந்த அதிகாரியிடமிருந்து ஒரு அத்தாட்சிப்பத்திரம் பெற்று விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கவேண்டும்.

இயன் சான்டிமன்
வித்தியாதிபதி.

[2649]

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# "புஞ்சி மெனிக்கா"

செ. நடராசா

நண்பன் கணேசனைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் அவனது சோகக்கதையொன்று ஞாபகம் வரும். அந்தச் சோகக்கதையை அவன் மொழிகளாகவே கூறுகின்றேன்.

எனது வாழ்க்கையில் இந்த மாதிரிக் கோர சம்பவம் இனிமேல் சம்பவிக்கப் போவதுமில்லைச் சம்பவித்ததுமில்லை. விதியுடன் விளையாடிய நான் அந்த விதிக்குப் பலியாகிவிட்டேன். கறைபட்ட ஹிருதயத்துடனும் வலியற்ற மனத்துடன் நானும் ஜீவன் என்று உலாவுகிறேன். எல்லையற்ற லீலா விநோதங்களைச் செய்யும் பரம்பொருள் இந்த அற்ப ஜீவனைக் கசக்கிப் பிளிந்துவிட்டார். பழைய நிகழ்ச்சிகளை எண்ணினால் என் இருதயம் குமுறுகிறது. மனம் வான வெளியில் இறக்கைகட்டிப் பறக்கிறது.

நான் ஏழையுமல்ல, பெரிய பணக்காரனுமல்ல, சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்தான். எனது தாய் தந்தையர் பணக்காரர்களாயில்லாவிட்டாலும் ஏதோ குடும்பத்தைச் சம்ரட்சணை செய்யவும் மாதத்தில் கொஞ்சமாவது மீதப்படுத்தவும் தக்க வருமானம் இருந்தது. அவர்கள் அந்தச் சொற்ப சம்பாத்தியத்தில் என்னைத் துன்பமே தெரியாதபடி வளர்த்தார்கள். இன்ப வெளியில் நான் பறந்து கொண்டிருந்தேன். பால்ய வயதில் என்னை உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்க அனுப்பினார்கள். இளம் வயதில் நான் காட்டிய அசாத்திய திறமையினால் எனது ஆசிரியர்கள் என்னைப் புகழ்ந்தார்கள். உள்ளூர்ப் படிப்பு முடிந்ததும் கலாசாலைக்கனுப்ப என் தந்தை துடிதுடித்தார். அதன்படியே சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள ஒரு கலாசாலையில்சேர்ந்தேன். இளம் பராயத்திலேயே கம்பன் காவியங்களில் அசாத்திய பிரேமை இருந்ததனால், கலாசாலையில் அது மேன்மேலும் வளர்வதாயிற்று. கலாசாலைத் தமிழ் வகுப்பில் நான் முதற் பையன். கம்பன் காவியங்கள் என்றால் அதில் எனக்குத் தனியாசை. என் கற்பனைக் கெட்டியபடியெல்லாம் கருத்துக் கூறுவேன். பல சமயங்களில், எங்கள் தமிழ்ப் பண்டிதர் என் அறிவுத் திறமைக்காக என்னைப் புகழ்வார். கம்பன் கவிதைகளையும் மேகதூதம்போன்ற இலக்கியங்களையும் படித்ததால் படிப்படியாக இயற்கை அழகுகளில் என் மனம் லயித்தது. மேற்சொன்ன காரணங்களால் இயற்கை அன்னை தாண்டவமாடும் கிராமங்களுக்கு அடிக்கடி போவதுண்டு. ஓங்கியுயர்ந்த மலைகளையும் அவற்றிடையே சலசல என்று பாயும் அருவிகளையும் கண்ணுக் கெட்டிய தூரம்வரை பச்சைப்பசேலென்றிருக்கும் மரஞ் செடிகளைக் காணுந்தோறும் என் மனம் குதூகலிக்கும். சில சமயம் பித்துப் பிடித்தவன் போல் அவற்றைப் பார்த்துக்கொண்டிருப்பேன். சிலசமயம் இயற்கை வர்ணனை கவிகள் இயற்றி மகிழ்வேன். மாலை மதியமும் வீசு தென்றலும் என் மனவெழுச்சியை அதிகமாக்கும். சிருஷ்டி கர்த்தாவின் லீலா விநோதங்களையும், கடவுள் தத்துவத்தையும் எண்ணி எண்ணி மகிழ்வேன். ஒரு வார்த்தையில் சொல்லுகிறேன். இன்பத் தோணியில் ஆடி ஆடி உல்லாச வாழ்க்கைக் கடலில் மிதந்துகொண்டிருப்பேன்.

நடராசன் என்றொரு தோழன் எனக்கிருந்தான். சதா கம்பராமாயணத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பான். நல்ல படிப்பாளி. கற்பனை உணர்ச்சி கொண்டவன். அவன் ஒருமுறை தன் கிராமத்திற்கு ஒரு வாரகாலமாவது வந்து தங்கவேண்டுமென்றும் சுற்றுடல்கள் பிரமிக்க வைக்கக்கூடியதென்றும் எழுதியிருந்தான். கடைசியாகச் சொன்ன காரணம் என்னை அவனிடத்திற்குப் போகத் தூண்டியது. வசந்தகால விடுமுறையின்போது நண்பன் கிராமத்திற்குச் சென்றேன். நகரிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்திலுள்ள அழகிய கிராமமது. கிராமவாசிகள் தமிழரல்ல சிங்களவர். விவசாயத்தில் தமிழருக்குச் சளைத்தவரல்ல என்பது அவர்கள் கிராமத்தில் மிதித்தவுடனேயே தெரிந்துவிட்டது. வழி நெடுகிலும் வயல்கள். வயல்கள் இல்லாவிடத்து வேறு தானியங்கள். எங்கும் ஒரே குளிர்ச்சிதரும் பச்சை நிறம். ரம்மியமாக இருந்தது அந்தக் கிராமம்.

நண்பன் வீட்டையடைந்து இளைப்பாறியதும், நண்பன் அங்குள்ளவரின் பழக்க வழக்கங்களைப்பற்றி ஒரு குட்டி உபதேசம் செய்தான். அந்நிய சாகியத்தாருடன் அதிக சம்பந்தம் வைத்துக்கொள்ளாத எனக்கு அவன் கூறியவை வியப்பை அளித்தன. அடுத்த நாளே ஊர் சுற்றப் புறப்பட்டோம். மூலை முடுக்குகளில் கிடந்த இயற்கை அழகெல்லாம் ஒருங்கே திரண்டு வந்தது போன்றிருந்தது அந்தக் கிராமத்தின் லாவண்யம். இடையிடையே தோன்றிய புத்த விகாரைகள் கிராமத்திற்கு அதிக வனப்பாக இருந்தன. என் மனமும் கட்டுக்கடங்காமல் தாவித் தாவிக்கொண்டேயிருந்தது.

அன்று சாயந்திரம் நண்பனுக்கும் சில அவசர ஜோலிகள் இருந்தமையால் நானே ஊர் சுற்றப் புறப்பட்டேன். தோப்புகள் துரவுகள் எல்லாம் சுற்றிவிட்டு சமநிலமுள்ள ஒரு மேட்டிற்கு வந்து ஒரு கல்லின்மீது உட்கார்ந்தேன். தூரத்தில் உள்ள மலைகளில் முகில் செய்யும் விளையாட்டுக்களையும் கதிரவன் மறையும் போது தோன்றும் வர்ண ஜாலங்களையும் கண்டு என் மனம் லயித்துவிட்டது. இருட்டுஞ் சமயம். ஆனால் கதிரவன் ஒளி இன்னும் மங்கவில்லை. 'களுக்' என்று சிரிப்பின் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. புராண இதிகாசங்களில் நான் படித்த கற்பனைப் பெண்கள் உயிர் பெற்று வந்தது போன்றிருந்தது அவள் தோற்றம். ரம்பையென்றும் ஊர்வசியென்றும் நான் படித்திருக்கிறேன். ஆனால் அவர்களைக் கண்டதேயில்லை. அந்த மாயப் பெண்கள் எத்தனையோ தவசிரேஷ்டர்களை மயக்கி இருக்கின்றார்களென்றும் காவியங்கள் கூறுகின்றன. ஆனால், அந்த மாயப் பெண் அவர்களின் பிரதிநிதியாகவே தோன்றினாள். இயற்கை எழிலில் வளர்ந்த மேனி—பூரித்து நிற்கும் உடல் வனப்பு,—மேதாவிலாசம் பொருந்திய வதனம்—ஒளி வீசும் கண்கள்—எல்லாம் என்னைச் சொப்பன உலகிற்குக் கொண்டு சென்றன.

பக்கத்தில் உள்ள ஓடையில் நீர் மொள்ளவந்த அவள் பேயறைந்தவன் போல் நான் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து புன்னகைத்ததில் அர்த்தமில்லாமலில்லை. இயற்கையாக எழும் லஜ்ஜையையும் அடக்கிக்கொண்டு அவளைக்கவனித்தேன். அவள் என்னைக் கவனிக்காதது போல் நீர் மொண்டதும் தான் வந்தவழியே போய்விட்டாள்.

ஒரு இடத்தில் லயித்திருந்த மனம் பல்கிளைகளாகப் பிரிந்தது. அதன்பின் மலைகளெல்லாம் மலைகளாகவே தோன்றின. மரங்களும் மரங்களாகவே காட்சியளித்தன. அவற்றில் உள்ள அழகுகளை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நன்றாக இருட்டியதும் நண்பன் வீட்டுக்குச் சென்றேன். அவன் கேட்ட கேள்விக்கும் என்னால் தகுந்த பதிலளிக்க முடியவில்லை.

அடுத்த நாள் அந்தக் கிராமத்தவர்கள் புத்த பகவானுடைய விசேட தினமொன்றைக் கொண்டாடினார்கள். நண்பனின் அழைப்பின் பேரில் அங்குள்ள புத்த விகாரைக்குச் சென்றேன். ...திய ஒளியைப் பரப்பி ...சையை நிலைநாட்டிய புத்தனின் கோவில் அன்று தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்கும் நறுமணம் கமழ்ந்தது. நானும் புதியவனாகையால் கிராமத்தவர்கள் செய்யும் ஆராதனைகளைப் பயபக்தியுடனும் ஆச்சரியத்துடனும் கவனித்துக்கொண்டிருந்தேன். ஆராதனை முடிந்ததும் பெண்களும், ஆண்களும் நறுமலர்த் தட்டுக்களைக் கையிலேந்திக்கொண்டு கோவிலை வலம்வந்தார்கள். நண்பன் கூறியதற்கிணங்கி மலர்த்தட்டுக்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டேன்.

என் சிந்தனையைச் சிதற அடித்து — என் நெஞ்சத்தைக் கொள்ளைகொண்ட அந்தமோகினியும் மலர்த்தட்டைக் கையில் ஏந்தி வலம்வந்தாள். அவள் தனது குறுகுறுத்த விழிகளால் என்னை ஒருதரம் பார்த்துவிட்டு மலர்த்தட்டை என்னிடம் நீட்டினாள். நான் தொட்டுக் கண்களில் ஒற்றியதும் மறுபடியும் என்னை நோக்கிவிட்டு அப்பாற் சென்றாள். அவளது மோகன பார்வை என்னை மேகமண்டலமெல்லாம் தூக்கிச்சென்றது. என் இருதயத்தின் உள்ளே—உள்ளே சென்று என் நெஞ்சைப் பதற அடித்துவிட்டது.

நண்பன் "போகலாம் வா" என்று கூறும்பொழுது தான் எனக்குச் சுயஉணர்ச்சி வந்தது. நண்பன் வழி நெடுகிலும் ஏதோ கூறிக்கொண்டே வந்தான். ஆனால் அவன் என்ன சொன்னான் என்பது எனக்கே தெரியாது.

அடுத்த நாளும் அந்திப் பொழுதில் அதே கல்லில் உட்கார்ந்திருந்தேன். நெஞ்சு துறுதுறுத்துக்கொண்டிருந்தது. காலடிச்சத்தங் கேட்டுத் திரும்பினேன். அந்த மாய மங்கை நீர்க் குடத்துடன் வந்துகொண்டிருந்தாள். எப்படியாவது அவளுடன் நாலு வார்த்தை பரிமாற வேண்டும் என்றிருந்த எனக்கு அவள் நெருங்கி வந்ததும் நாக்கு அடைத்துக்கொண்டது. சொல்ல முடியாத தொன்று நெஞ்சை அமுக்கியது. கல்லாய்ச்சமைந்து விட்டேன்.

அந்த மாய மங்கை என்னைப் பார்த்துச் சிங்களத்தில் ஏதோ கூறினாள். நான் சிங்களம் தெரியாதென்று கூறவே மழலைத் தமிழில் 'இன்றும் நல்ல 'பிங்கம' வருகிறீர்களா?'' என்றாள் அவள்.

நான் ஆச்சரியமும் வியப்புந் தோன்ற வருகிறேன் என்றேன். வரும்பொழுது நறுமணமுள்ள மலர்கள் கொண்டுவந்து அர்ச்சியுங்கள். நீங்கள் ஊருக்குப் புதிது. உங்கள் நண்பர் சொல்லவில்லையா'' என்றாள் மறுபடியும். நானும் சந்தர்ப்பத்தைத் தவற விடாமல் "நான் புதிதென்பது உனக்கு எப்படித் தெரியும்''? என்றேன் அவள் பவள இதழ்களில் ஒரு புன்னகை சுழித்தோடியது. "இது கூடவா தெரியாது. நீங்கள் வருவதற்கு முன்னமே உங்களைப்பற்றிய செய்தி பரவி விட்டது. நீங்கள் கலேஜில்படிக்கிறீர்களல்லவா?'' என்று கூறி என்னை மறுபடியும் திணற அடித்தாள்.''

"ஏதேது உங்களுக்குத் தெரியாத விஷயமே கிடையாது போல் இருக்கிறதே'' என்று நான் கூறும்பொழுது யாரோ வருவதுபோற் தோன்றவே கடைசி வார்த்தையை 'நசுக்கி' விட்டேன். அவளும் அதைக்கவனித்தவளாய் 'கட்டாயம் வாருங்கள்' என்று கூறி நீர்க்குடத்துடன் போய்விட்டாள். அந்தச்சொற்ப நேரச் சம்பாஷணையில் அவள் என் நெஞ்சையும் உடம்பையும் வேறாகப் பிரித்துவிட்டாள். என் மனம் பராதீனமாய்விட்டது.

பொழுது விடிந்தால்—மறைந்தால் அவள் தியானமாகிவிட்டது எனக்கு. அவளுடன் வார்த்தையாடுவது தெவிட்டாத இன்பமாகத் தோன்றியது. அந்தக் கல்லில் அவள் தியானமாகவே தவஞ் செய்யத் தொடங்கிவிட்டேன்.

* * *

வழக்கம் போல் ஒரு நாள் அந்தக் கல்லில் உட்கார்ந்திருந்தேன். திடீரென மழை தூற்றத் தொடங்கியது. சமீபத்தில் தங்குவதற்கு ஏற்ற வசதிகள் இல்லாமையின் ... நண்பன் வீட்டை நோக்கி நடந்தேன். இதற்கிடையில் மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது, நான் ஓடத் தொடங்கினேன். எதிரே வந்த அவள் நான் படும் கஷ்டத்தைக் கண்டு, "நீங்கள் எங்கள் குடிசையில் வந்து தங்கி மழை விட்டதும் போகலாம். ஏன் மழையில் ஓடுகிறீர்கள்'' என்றாள். பிறகு ஏதோ நினைத்தவள் போல் "குடிசையில் தங்குவீர்களோ?'' என்று பதட்டத்துடன் கேட்டாள். அவள் வசம் நான் இருக்கும் பொழுது குடிசையாவது மண்ணுங்கட்டியாவது எல்லாம் கற்பகப் பூஞ்சோலைதான். மறுமொழி கூறாது அவள் பின்னாலே சென்றேன். அவள் குடிசையை அடைந்ததும் ஒரு நாற்காலியைக் காட்டி அதில் இருக்கும்படி வேண்டினாள். எனக்கு எல்லாம் கனவு போல் இருந்தது.

"பட்டணத்தில் பழகிய உங்களுக்கு இந்தக் குடிசையில் இருப்பது கஷ்டமாகத்தானிருக்கும்'' என்று கூறிப் பேச்சைத் தொடங்கினாள் அவள்.

"உன் போலொத்த பெண்கள் வசிக்கும் இடம் குடிசையானாலும் அரண்மனையாகவே எனக்குத் தோன்றுகிறது.'' என்று கூற வாயெடுத்த நான் "இல்லை ஆபத்திற்கு இதுவாதல் உதவியதே அதற்கு உன்னைப் பாராட்டவேண்டும்'' என்று கூறிவைத்தேன்.

அவளது முகத்தில் லேசாக ஒரு புன்முறுவல் தவழ்ந்தது.

"உன் தகப்பனார் எங்கே? காணவில்லையே'' என்றேன்.

நான் இதைக் கூறியதும் அவள் முகத்தில் துக்கக் குறி தோன்றியது.

"எங்கள் வாழ்க்கையே இப்படித்தான். காலை முதல் மாலை வரை வயலில் வேலைசெய்ய வேண்டும். அதன்பின் கஞ்சியோ கூழோ உண்டு உறங்க வேண்டும். எனது தந்தையோ வயோதிபர். வயல் வேலைக்குச் சென்றவர் இன்னுந் திரும்பவில்லை'' என்றாள் அவள். ரத்தினச் சுருக்கமாக அவள் கூறிய வார்த்தையிலிருந்து துக்கத்தின் எக்காளமும், சோகத்தின் நாதமும் ஒலித்தன. என்து மனமும் இளகிவிட்டது.

"நீ படித்திருக்கிறாயா?'' என்றேன் நான்.

"ஆம், கிராமப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வகுப்புவரை படித்திருக்கிறேன். அதற்கு மேல் எங்கள் கஷ்ட சீவியம் இடந்தரவில்லை'' என்றாள் அவள்.

பட்டணத்தில் எங்காவது ஒரு வீட்டில் வேலைக்கமர்ந்து உன் தந்தையைக் காப்பாற்றக் கூடாதா' என்று நான் வீம்புக்காகக் கேட்ட கேள்வி அவளின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டது.

'அவ்வளவு தூரம் எங்கள் கஷ்டநிலை போகவில்லை. இறப்பதானாலும் மானமாகவே இறப்போம்' என்றாள் அவள். அந்தப் பெண் கூறிய வார்த்தைகள் என்னைப் பிரமிப்படையச்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)




மேலதிகமாக வண்ணான் கிழித்தது!


— ஆடைகள் மிகவும் ஓறுப்பனவாயிருக்கும்போது

இந்நாட்களிலிருக்கும் கொள்ளை விலையில் வண்ணான் உங்கள் ஆடைகளைக் கந்தையாக்க விடமுடியாது. அவைகளைச் சுத்தப்படுத்துவதற்குக் கிழிந்துபோகக் கூடாத முறையைக் கண்டுபிடிக்கவேண்டும். 'சன்லைட் சோப்பை உபயோகித்து மிச்சம்பிடிக்கும் முறை'யை ஆரம்பிப்பதற்கு இதுதான் சமயம். இவ்விதம் மிருதுவான முறையில் ஆடைகளைத் தோய்ப்பது வண்ணானின் முறையிலும் எவ்வளவோ மேலானது. இது மிகவுஞ் சுலபமானது; ஆடைகளை மிகவுஞ் சுத்தமாகத் தோய்த்துவிடுகிறது; ஒரு நூலிழைதானும் கெட்டுப்போகமாட்டாது. உங்களுடைய வேலைக்காரனுக்குக் கீழே குறிப்பிட்டிருக்கும் சாதாரண விவரங்களை விளக்கிக் கூறவும்.

**உங்கள் வேலைக்காரனுக்குச் சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும் முறையைக் கற்பியுங்கள்.**



1. ஆடைகளைத் தண்ணீரில் நன்றாக ஊறவையுங்கள்.
2. ஆடைகள்மீது — அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக—சன்லைட்டை நன்றாகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல் வேண்டும். அவைகளை அடிக்கவேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரை அழுக்கை இழக்கி எடுத்துவிடுகிறது
4. நன்றாக அலசிக் கழுவவும். அழுக்கு சன்லைட்நுரையிலேயே இருக்கிறபடியால் அலசிக் கழுவிவிடவும். நன்றாக அழுக்கடைந்த ஆடைக்குத் திரும்பவும் சோப் போடவேண்டும்.




**சன்லைட் சோப்**

**ஆடைகளைப் பாதுகாக்கின்றது**

S. 72-169

LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday Feb., 24, 1946 | No. 30

நற்சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைலவகைகளும் விற்பனைக்கிருக்கின்றன.

[2575]

விளம்பரம் இன்றேல் பெரும் பணம் இல்லை.

## 'புஞ்சி மெனிக்கா'

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து விட்டது. மீண்டும் அவளின் ஆத்திரத்தைக் கிளற மனமில்லாமல் கதையை வேறு வழியில் திருப்பினேன். இதற்கிடையில் மழையும் நின்றுவிடவே நான் எழுந்து 'நான் வருகிறேன் உனது பெயர் என்ன' என்றேன் 'இன்னும் மழை நன்ருக ஓயவில்லையே ஆறிப்போகலாம்' என்ருள் அவள். 'ஆறியமழையுடன் போவது நல்லது. உனது பெயர் என்ன என்றேன்' 'எனது பெயரா............புஞ்சி மேனிக்கா' என்ருள் அவள்.

நான் சிரித்துக் கொண்டே 'நல்ல பெயர்தான். நீயும் சாமர்த்தியசாலிதான். எங்காகிலும் நன்ருக இருக்கவேண்டும்,' என்று கூறி அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். நான் மறையுமட்டும் அவள் என்னைக் கவனித்ததை நானும் பார்க்காமலில்லை.

அந்த நிகழ்ச்சியின் பயனுல் என் மனம் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணியது. இவள் யார்? நான்யார்? முன்னறியாத பெண்ணிடம் என்மனம் வாத்சல்யம் கொள்வானேன். இது பெரும் புதிராக எனக்குத் தோன்றியது. இது தான் மனிதயத்தனத்துக்கும் அறிவுக்கும் எட்டாத பிரச்சினை.

எப்படியாவது அவளின் துன்பத்தில் ஒரு பகுதியை நிவர்த்திக்கச் சங்கல்பம் செய்துகொண்டேன்.

மறுநாள் வேண்டுமென்றே அவள் குடிசைப் பக்கம் போனேன். கனிந்த முகத்துடன் வரவேற்ருள்.

"உன் தந்தைவந்து விட்டாரா?" என்றேன் நான்.

"ஏன்? என் தந்தையைப் பார்க்கத்தான் வந்தீர்களா?" என்று கூறி என்னைக் குறும்பாகப் பார்த்தாள்.

"நான் ஒன்று கூறுகிறேன் நீ விபரீதமாக எண்ணக் கூடாது." என்றேன் நான்.

வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

"ஆண்களின் இருதயத்தில் உள்ளதைப் பெண்கள் சுலபத்தில் அறிந்து கொள்வார்கள்" என்று கூறியதில் அவள் மனநிலை எப்படிப்பட்டதென்பது எனக்கும் தெரிந்துவிட்டது.

"பட்டணத்தில் எங்காவது உன்னைப் படிக்கவைத்து மேனிலைக்குக் கொண்டுவருகிறேன். உனது சம்மதமென்ன" என்றேன்.

அவளது முகத்தில் பலத்த ஏமாற்றத்தின் அறிகுறி தென்பட்டது.

"என்ன யோசிக்கிருய். உன் தந்தையுடன் ஆலோசித்து மறுமொழி சொல்" என்றேன் நான் மறுபடியும்.

"என் தந்தை வயோதிபரானுலும் பிடிவாதக்காரர். இதற்குச் சம்மதிப்பாரென்று நான் நம்பவில்லை" என்ருள் அவள்.

"தெண்டித்துப்பார்" என்று கூறி விட்டு நான் புறப்பட்டபோது தன் சொந்தக் கைபடப் பின்னிய 'கைலேஞ்சி' ஒன்றைத் தந்து அதை எடுத்துக்கொண்டு போகும்படி வற்புறுத்தினுள்.

அந்தப் பேதைப் பெண்ணின் கற்பனையை அப்பொழுது நான் அறியமுடியாமலில்லை.

மறுநாள் அவளைச் சந்தித்தபொழுது என் ஏற்பாட்டிற்கு அவள் தந்தை உடன்படவில்லை என்பதை வருத்தத்துடன் கூறினுள்.

எனக்குப்பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அவளின் விதியும் அவ்வளவு தான் என்று எண்ணினேன். இருந்தும், மனமில்லாமல், உனது முடிவான அபிப்பிராயம் என்ன" என்றேன்.

அவள் நீர் நிறைந்த கண்களுடன் கூறினுள்: "நீங்கள் சொன்னது சிறந்த ஏற்பாடுதான். ஆனுல் என் தந்தை அதற்கு ஒருப்படவில்லை. இளம்பெண்கள் தனிமையில் வெளியில் இருக்கப்படாது என்ற 'கட்டுப்பெட்டி' எண்ணங்கொண்டிருக்கிருர். அதுவுமல்லாமல் நீங்கள் எங்கள் ஜாதிக்காரரில்லையாம். அந்நியனுடன் என்னை அனுப்புவது எங்கள் வம்சத்திற்கு இழுக்காம்" என்று கூறி வரும்போதே அவள் அழுதுவிட்டாள்.

"நீ அழாதே; சாதி மதம் எல்லாங் கடந்தது தான் அன்பு என்பதை உன் தந்தை அறியவில்லை. போகிறது. நீ இங்கேயே இரு. முடிந்தவரையில் உன் தந்தையைத் திருப்திப்படுத்தி உன் எண்ணத்திற்கு வரச் செய். அதன் பின் ஆக வேண்டியன செய்யலாம்" என்றேன் நான்.

அவளது முகத்தில் கவலைக் குறி சிறிதளவாவது நீங்கினதாகத் தெரியவில்லை.

"நாளைக்கு நான் பட்டணம் போகிறேன். இரண்டு மாதத்தில் திரும்பியும் வருவேன் அதற்கிடையில் உன் தந்தையை வசப்படுத்து" என்று சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கூறினேன்.

அவளது முகத்தில் தாரை தாரையாக நீர் வழிந்தோடியது. அவளைக் காணச் சகிக்காமல் "நான்வருகிறேன் புத்தபகவான் மனம் வைத்தால் உனது காரியம் கைகூடும்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

அடுத்தநாள் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தேன். நண்பன் வண்டி கொண்டுவருவதாகப் புறப்பட்டுப்போய் சிறிது நேரத்தில் திரும்பி வந்து வண்டி யோட்டுபவன் இன்றைக்கு வரமாட்டான் என்ருன் துக்கத்துடன்.

"ஏன்?" என்றேன் நான்.

"அவனது மகள், பாவம்! இளம் பெண், நேற்று இரவு தற்கொலைசெய்து கொண்டாள்" என்ருன் நண்பன்.

"அவள் பெயரென்ன"? என்றேன் பதட்டத்துடன்.

"புஞ்சி மேனிக்கா" என்ருன் நண்பன்.

## SAMUEL SONS & Co., Ltd.,

HOSPITAL ROAD, JAFFNA

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST., COLOMBO

- இரும்பு கம்பிகள் கேடர்கள் சிலாகைகள் அச்சுகள் தகடுகள்
- நீர் இறைக்கும் யந்திரங்கள் குழாய்கள் தாங்கிகள்
- கல்வனைஸ் தகடுகள் தாங்கிகள் வாளிகள்
- கைத்தொழிற்குரிய ஆயுதங்கள் மற்றும் கமத்தொழிற் கருவிகளும்
- பித்தளை தகடுகள் பூட்டுகள் பிணைச்சல்கள்
- மைவகைகள் மை எண்ணெய் வாணிஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்

ஆஸ்பத்திரி ரோட் : : யாழ்ப்பாணம்

தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

[2059]




## உங்கள் அழகைக் காப்பாறுங்கள்

உங்கள் அழகு சோப்பை மீதப்படுத்துவதனுல்

நீங்கள் தினசரி அத்தியாவசியமாகச் செய்யும் அழகு-பேணும்முறையைத் தவறவிடுவீர்களாயின், உங்களது சருமத்தின் பிரகாசமும் மிருதுவான தன்மையும் கூடிய சீக்கிரத்தில் குறைந்துகொண்டே வரும் ஆனபடியால் வழமையாக நீங்கள்உபயோகிக்கும் போதுமான லக்ஸ் டொயிலெட் சோப் எப்பொழுதும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருக்கும்போது இரண்டுகட்டிகள் உபயோகிக்கும் காலத்திற்கு இந்த இன்றியமையாத அழகு சோப்பின்ஒருகட்டியை எப்படி நின்றுபிடிக்கச் செய்யலாம் என்பதைத் தயைகூர்ந்து கற்றுக்கொள்ளவும். சோப்பைப் பாதுகாப்பதற்கு இந்த 3 நிபந்தனைகளையும் பின்பற்றுங்கள்:

**உலரவைத்தல்:** உபயோகித்ததன் பின்னர் அதைக் கம்பிக்கூடை அல்லது அது போன்ற நீர்வடிக்கும் சிறுபாத்திரத்தில் வைக்கவும். இப்படியாக உலரவைத்தால் வீணுகத் தேய்ந்து அல்லது உடைந்துபோகமாட்டாது. மெல்லிய துண்டாக வரும்வரைக்கும் உபயோகிக்கலாம். ஒருபோதும் தண்ணீருள் ஊறவிடவேண்டாம், சிறிதுநேரத்திற்காவது தண்ணீருள் சோப்கட்டியை வைக்கவேண்டாம். தண்ணீரோடும் குழாயின் கீழும் வைத்திருக்கக்கூடாது. சோப் மிகவும் விரைவில் கரைந்துபோகிறது.

**புதியதில் பழையதை ஒட்டுதல்:** தேய்ந்துபோன சிறு துண்டுச் சோப்பை ஒருபோதும் எறிந்துவிடக்கூடாது. பழையகட்டியில் மீந்திருப்பதைப் புதியதுடன் சேர்த்து ஒட்டிவிடுதல்வேண்டும்.—இரண்டையும் ஈரனைத்து ஒன்றுடனென்றைச் சேர்த்து அமர்த்தி சிறிதுநேரம் உலரவிடவேண்டும். இவ்விதம் தேய்ந்துபோன பழைய சோப்கட்டியை இறுதி வரைக்கும் உபயோகிக்கமுடியும்.






## லக்ஸ் டொயிலெட் ஸோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகுசோப்

### தமிழ் ஆசிரியர்கள் நிலைமை

#### மந்திரியாருடனும், நிர்வாகசபை அங்கத்தவருடனும் பேட்டி

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க உபதலைவரும் காரியதரிசியும் 19-2-46-ல் கனம் கல்வி மந்திரியையும் கல்வி நிர்வாகசபை அங்கத்தவர்களையும் தனித்தனி சந்தித்து ஆங்கிலக் கல்லூரிகளில் புதிதாக ஆரம்ப வகுப்புகள் நடாத்துவதற்குச் சாதகமாக உண்டாக்கப்படவிருக்கும் கல்விச் சட்டத் திருத்தத்தால் தமிழ்ப் பாடசாலைகளுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் ஏற்படவிருக்கும் ஆபத்தான நிலைமையைத் தெரிவித்தனர். அன்றியும் இச்சட்டத் திருத்தத்தால் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படவேண்டிய நிலைமை உண்டாகும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டினர்.

கௌரவ மந்திரியவர்கள் அவ்வாருன நிலைமை ஏற்படாது பார்த்துக் கொள்வதாக வாக்களித்துள்ளார்கள்.

—கடிதம்.

### ஸ்ரீ சஞ்சீவி ராவ்

யாழ்ப்பாணப் பட்டின ஆசிரியர் சங்க ஆதரவில், மத்திய கல்லூரி மண்டபத்தில் நாளையதினம் பிற்பகல் 4-15 மணிக்குக் கல்வி நிபுணர் ஸ்ரீ B. சஞ்சீவி ராவ் அவர்கள் ஒரு சொற்பொழிவாற்றுவாரென மேற்படி சங்கக் காரியதரிசி அவர்கள் அறிவிக்கின்றனர்.

### அறிவித்தல்

#### 1-2-46 இல் வியாபாரிகள் வசமுள்ள கையிருப்பு

1-2-46 இல் தங்கள் வசமுள்ள எல்லாப் பங்கீட்டுப் புடவைகட்கும் சமமான கூப்பன் மொத்த எண்ணிக்கையைக் காட்டும் குறிப்புப் பிரதியொன்று, எல்லாச் சில்லறை மொத்த வியாபாரிகளால் 1946-ம் ஆ பெப்ரவரி மாதம் 25-ந்திகதியன்று அல்லது முன் எமக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று இத்தால் கேட்கின்ருேம்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

106 ஹவலொக் ரோட்
கொழும்பு 18-2-1946

[2648]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 பிப்ரவரி 24உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org